
www.tamilarangam.net

# பாலம்

ஜனவரி 1998



## 50 ஆண்டு வாழ்வு?

தமிழீழ மக்களின் நெஞ்சங்களில் நிறைந்தவர்

புதிய ஆண்டின் சிறப்பு விருந்து

பிரான்ஸை அச்சுறுத்தும் தொடர் கொலைகள்

பிரான்ஸ் – [illegible] Ffr சுவிஸ் – 5 Sfr ஜேர்மனி – 3 Dm டென்மார்க் – 12 Dkr நோர்வே – 12 Nkr இங்கிலாந்து – [illegible]
கனடா – 45 C$ அவுஸ்திரேலியா – 45 A$ ஏனைய நாடுகள் – 20 [illegible]

www.tamilarangam.net






# ஞானம் சென்ரர்

## சர்வதேசத் தொடர்புகளுக்கான நிமிடங்களை மிக அதிகமாகத் தருகிறோம் ★

தொடர்புகளுக்கு

| | | |
|---|---|---|
| இந்தியா | 30 | நிமிடம் |
| கனடா | 80 | நிமிடம் |
| தாய்லாந்து | 23 | நிமிடம் |
| ஹொங்கொங் | 45 | நிமிடம் |
| பிரான்ஸ் | 135 | நிமிடம் |
| இலங்கை | 28 | நிமிடம் |
| சுவிஸ் | 70 | நிமிடம் |
| மொறிசியஸ் | 28 | நிமிடம் |
| சிங்கப்பூர் | 45 | நிமிடம் |

**GNANAM** Telecom Center
**195, Rue du Fg. Saint Denis.**
**75010 Paris, France.**
**Tel: 01 46 07 09 36**
**Fax: 01 46 07 00 44**
**M°: Lachapelle / Gare du Nord**

பாரிஸ் 10-ல்
83, Rue du Fg. Saint Denis.
75010 Paris.
M°: Chateau d' eau

பாரிஸ் 20-ல்
38, Rue de Belleville
75020 Paris.
Tel: 01 40 33 36 72
M°: Concourt

GNANAM Telecom Center




பாரிஸ் 18-ல்
13, Rue de Suez
75018 Paris.
Tel: 01 42 52 32 52
Fax: 01 42 52 34 52
M°: Chateau Rouge

பாரிஸ் 11-ல்
175, Rue de St. Maur
75011 Paris.
Tel: 01 43 38 22 98
M°: Belleville

இலங்கைக்கான
தொடர்பு நேரம் 28
நிமிடங்களாக
அதிகரிக்கப்பட்டுள்ளது

| | | |
|---|---|---|
| பிரித்தானியா | 100 | நிமிடம் |
| அமெரிக்கா | 100 | நிமிடம் |
| ஜேர்மனி | 75 | நிமிடம் |
| அவுஸ்திரேலியா | 65 | நிமிடம் |
| பிலிப்பைன்ஸ் | 32 | நிமிடம் |
| அல்ஜீரியா | 30 | நிமிடம் |
| மொறோக் | 50 | நிமிடம் |
| பிரான்ஸ் (கைத்தொலைபேசி) | 80 | நிமிடம் |


**வெகுவிரைவில் சுவிஸ், லண்டனில் எமது சேவை ஆரம்பமாகின்றது**

★ குறிப்பிட்ட சில நாடுகளுக்கு மட்டும்

www.tamilarangam.net



# உள்ளே....



50 வது ஆண்டு அடிமை விலங்கு இறுகப் பூட்டப்பட்ட நாள்
பக்கம் – 4



பக்கம் – 6
பிரான்ஸை அச்சுறுத்தும் தொடர் கொலைகள்



நெஞ்சங்களில் நிறைந்தவர்
பக்கம் – 22



பக்கம் – 24
புதிய ஆண்டின் சிறப்பு விருது




கேட்டோம் சொன்னார்கள்
பக்கம் – 27



பக்கம் – 39
பெருமைக்குரிய பெண்மணி



அறிவுதான் சக்தி
பக்கம் – 44




பக்கம் – 46
மலேசியா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net








தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# PAALAM

Tamil Monthly Magazine

ஜனவரி 1998

# பாலம்

சமூக-அரசியல்-கலை-
இலக்கிய மாத சஞ்சிகை

முகவரி:
Sønder Parken 10.st.tv
7430 Ikast
Denmark.

ஒரு ஆண்டுக்கான சந்தா

| | |
|---|---|
| பிரான்ஸ் | – 180 FFr |
| சுவிஸ் | – 48 Sfr |
| ஜேர்மனி | – 50 Dm |
| டென்மார்க் | – 200 Dkr |
| நோர்வே | – 200 Nkr |
| இங்கிலாந்து | – 20 £ |
| கனடா | – 45 C$ |
| அவுஸ்ரேலியா | – 45 A$ |

ஏனைய நாடுகள் – 20 £

Paalam Publications
A/C No: 3406689468
DEN DANSKE BANK
Østergade 1
7430 Ikast
DENMARK


பாலம் சஞ்சிகை நீண்ட இடைவெளிக்குப் பின்னர் உங்கள் கைகளில் புலம் பெயர் சூழலில் தமிழ்ச் சஞ்சிகை வெளியிடென்பது புயற் காற்றில் நடக்கும் பயணம் போன்றது. கொத்து மேகங்கள் போல நாடு நாடாகக் கூறுபட்டுக் கிடக்கும் தமிழினத்தை படைப்பிலக்கியத் தால் ஒன்றிணைக்க முயல்வதும் அது போன்ற பயணமே. எனினும் நம்பிக்கையுடன் நடப்பதே புயல் கடக்கும் பணி யென்பதை தொடர்ந்தும் கோடிட வேண்டிய அவசிய மில்லை.

படைப்பாளிகளுக்கு எப்பொழுதுமே காத்திரமான பணிகள் காத்துக் கிடப்பது வழமை. அதுவும் புலம் பெயர் படைப்பாளிகளென்றால் அந்தப்பணி இரட்டிப்பாகி விடுவது இயல்பு. புலம் பெயர் வாழ்வு தரும் அனுபவங்கள் படைப்புக் கலையில் புதிய வலுவும் வீறும் தரும் சுரங்க மாயுள்ளது. உலகமெல்லாம் பரந்துள்ள படைப்பாளிகளுட னும், வாசகர்களுடனும் கைகோர்க்கும் இம் முயற்சியின் பிரவாகத்தில் இணைவதில் தயக்கம் கூடாது.

இன்றுள்ள சூழலில் எப்பணியை எடுத்தாலும் உடன் முன்வரும் ஓர் கேள்வி தாயகத்தில் விடுதலை நதி புதுப் பொலிவுடன் பாய்கிறதா இல்லையா? என்பது தான். தொடர்ந்து விதிக்கப்பட்டு வரும் தடைகள் அந்தக் கேள்விக்கான பதிலாக இருக்கும். பாயாத நதிக்கு தடைச் சுவர் போடத்தேவையில்லை என்பதை உணர்ந்தால் நம்மில் புதுவலு பிறக்க அதுவே துணையாக அமையக் காணலாம். இதுவரை பாலம் வெளிவராது தாமதித்தது இடைவெளி. எனினும் ஏற்படும் இடைவெளிகளைக் கடந்திட உதவுவதும் பாலமே என்பதை நிறுவ, படைப்பாளிகள், வாசகர்கள் ஆகியோரது ஆதரவு எழுச்சியுடையதாக அமையுமென்ப தில் நாம் நிறைந்த நம்பிக்கை கொண்டுள்ளோம்.

**கலை இலக்கியப் படைப்புக்கள் மக்களை சிந்திக்கத் தூண்ட வேண்டும், பழமையிலும் பொய்மையிலும் பல் வேறு மாயைகளிலும் சிறைப்பட்டுக் கிடக்கும் மக்களது மனதில் புரட்சிகரப் பார்வையைத் தோற்றுவிக்க வேண்டும் மாறிவரும் சமூக விழிப்புணர்வை உருவாக்கவேணும்.**

**-தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 50 வது ஆண்டு அடிமை விலங்கு இறுகப் பூட்டப்பட்ட நாள்?

இலங்கைத் தீவு 1948–இல் பிரித்தானியாவிடம் இருந்து சுதந்திரம் பெற்றுக்கொண்டது. இலங்கை சுதந்திரம் பெற்றது என்பது வரலாற்று ரீதியாக பதிவு செய்யப்பட்ட ஒன்று. ஆனால் அங்குள்ள சகல மக்களும் சுதந்திரம் அடைந்தார்களா?

இலங்கைத்தீவு சுதந்திரமடைந்தாலும் மக்கள் குறிப்பாக தமிழ் மக்களிற்கு முன்னர் இருந்த சுதந்திரமும் உரிமைகளும் பறிக்கப்பட்டன. இது உலகறிந்த உண்மை. இந்த நிலையில் இந்த 50–வது ஆண்டு சுதந்திரதின விழா யாரிற்கு கொண்டாடப்படுகிறது. தமிழரிற்கு இது கொண்டாட்டமான நாள் இல்லை என்பதை ஸ்ரீலங்கா ஜனாதிபதியும் பாதுகாப்புப் படைகளும் இன்றுவரை உறுதியாக் கூறிவருகின்றன.

இலங்கைத் தீவிற்கு சுதந்திரம் கிடைத்துவிட்டது என்பதைக அர்த்தம் இருக்காது. ஏனெனில் இலங்கைத்தீவின் வடக்கு கிழக்கு மக்கள் இன்னும் ஆக்கிரமிப்பின் கீழ்தான் உள்ளார்கள். இதை ஸ்ரீலங்கா ஜனாதிபதியும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும், ஏன் செய்தி நிறுவனங்கள் கூட அடிக்கடி கூறிவருகின்றனர். அதாவது இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் அநேகமான பகுதிகள் எமது கட்டுப்பாட்டிலேயே உள்ளன என அதனால் இந்த சுதந்திர தின விழா தமிழரிற்கு எந்த விதத்திலும் உரியது அல்ல. தமிழ் இனம் கடந்த நான்கு நூற்றாண்டுகளாக அடிமையாக வாழ்ந்தாலும் கடந்த 50 ஆண்டுகளில் தொடர்ச்சியான இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.



தமிழரிற்கு எழுத்துச் சுதந்திரம் இல்லை. பேச்சுச் சுதந்திரம் இல்லை. கல்வியில் உரிய வேலைவாய்ப்புகள் இல்லை. ஸ்ரீலங்கா சிங்களவர்க்கு உரிய நாடு, அது உண்மை. அப்படியானால் தமிழருக்கு ஏது நாடு? அது இலங்கைத் தீவின் வடக்குக் கிழக்கை இணைப்பாகக் கொண்ட தமிழீழ தேசம். தமிழீழத் தேசத்திற்கோ பெப்ரவரி 4 சுதந்திர நாள் அல்ல. அடிமைவிலங்கு இறுகப் பூட்டப்பட்ட நாள். 5 லட்சம் தமிழர்கள் தாயகத்தை விட்டு வெளியேறியுள்ளார்கள். 7 லட்சம் மக்கள் தமிழீழத்திற்குள்ளேயே தமது சொந்த இடங்களில் வாழமுடியாது இடம்பெயர்ந்துள்ளனர். இடம்பெயர்ந்தவர்களும் , புலம் பெயர்ந்தவர்களும் கூட சுதந்திரத்தை இழந்தவர்கள் தான்.

சுமார் 60 ஆயிரம் தமிழ் மக்களைக் கொலை செய்து 50–வது ஆண்டு சுதந்திரதினத்தை கறைடிந்த வரலாற்றுடன் கொண்டாடுகின்றது ஸ்ரீலங்கா. பாதுகாப்பு ஏற்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



★ எமது தாய்நாடு விடுதலை பெறவேண்டும். எம்மைப் பிணைத்திருக்கும் அடிமை விலங்குகள் உடைத்தெறியப்பட வேண்டும். எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழ வேண்டும். இந்த இலட்சியம் ஈடேற வேண்டுமாயின் நாம் போராடித்தான் ஆகவேண்டும். இரத்தம் சிந்தித்தான் ஆக வேண்டும்.

★தமிழீழம் என்றோ ஒருநாள் உதயமாவது திண்ணம்; எமது மக்கள் விடிவு பெறுவது திண்ணம்; சமதர்ம சமூகமாக எமது நாடு வளங்கொழிப்பது திண்ணம். இந்த நம்பிக்கையில் ஆன்ம உறுதி தளராது விடுதலைப் பாதையில் விறு நடை போடுவோம்.

—தமிழீழத் தேசியத் தலைவர்



பாடுகள் ஸ்ரீலங்காவின் பல பகுதிகளிலும் பலப்படுத்தப்பட்டாலும் கொழும்பிலும் கண்டியிலும் விஷேடமாகவே கவனிக்கப்பட்டன. கண்டியில் தலதாமாளிகை குண்டுத் தாக்குதலால் கடுமையான சேதத்திற்குள்ளாகியுள்ளது. எத்தனையோ பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தும் தாக்குதல்காரர்கள் சுலபமாக ஊடுருவி தமது நோக்கை நிறைவேற்றியுள்ளனர். சிங்கள அரசும் இந்த சம்பவத்தை மதவாத அடிப்படையில் பிரச்சாரப்படுத்தியதால் சர்வதேச வானொலிகளும், தொலைக்காட்சிகளும் பௌத்த மதத்தினரிற்கெதிராக இந்துக்களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் என வர்ணித்தன.

சுதந்திரம் என்பது ஒரு நாட்டிலுள்ள பிரஜைகளுக்கு இருக்க வேண்டும். ஆட்சி பீடத்தில் இருப்பவர்களிற்கும், பாதுகாப்புப் படையினருக்கும் மாத்திரம் இருந்தால் போதாது. சுதந்திரத்தை அனுபவிக்க வேண்டியவர்கள் பொதுமக்களே.

தமிழ் மக்கள் தமது சுதந்திரத்தை தாமே பெற்றுக் கொள்ள வேண்டும். ஸ்ரீலங்காவின் சுதந்திரம் என்பது தமிழ் மக்களிற்கு கிடைத்த சுதந்திரம் அல்ல என்பதை 1948 இற்குப் பின்னர் நடைபெற்ற இனப் படுகொலைகளும், இராணுவ ஆக்கிரமிப்புகளும் தெளிவாகக் கூறியுள்ளன.



ஸ்ரீலங்காவின் இவ்வாறான நடவடிக்கைகளினால் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க போராடிவரும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு தமிழீழத்திலும் சர்வதேசத்திலும் பாரிய ஆதரவு கிடைத்து வருகின்றது.

இவ்வாறு பெருகி வரும் ஆதரவை எந்தவொரு சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது. தமிழீழ விடுதலைப்புலிகளைத் தடைசெய்வதன் மூலம் ஸ்ரீலங்கா அரசாங்கம் எந்தவொரு நன்மையையும் அடையப்போவதில்லை. மாறாக கடுமையான இராணுவத் தோல்விகளையும், அரசியல் சிக்கல்களையுமே சந்திக்கப் போகின்றது. இது வரலாறு கூறப்போகும் ஒரு உண்மையாகும்.

தமிழீழ மக்களும் விரைவில் தமது சுதந்திரத்தை கொண்டாடப் போவது உறுதி.

★★★



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நடுங்கும் தொடர் கொலைகள்

அமெரிக்க நகரங்களைப் போலவே பிரான்ஸின் தலைநகரான பாரிஸ் நகரமும் குற்றவியல் நடவடிக்கைகள் அதிகரித்துவிட்ட நகரங்களில் ஒன்றாக மாறிக்கொண்டு வருகின்றது.

அரசியல் கொலைகளின் அடிதடிக்கொலைகளிலிருந்து பாலியல் வன்முறைக் கொலைகள் என்று கொலை செய்யப்பட்டவர்களின் பட்டியல் வருடாவருடம் அதிகரித்துச் சென்று கொண்டிருக்கிறது.

ஆயினும் 10 டிசம்பர் 1994 லிருந்து 17 நவம்பர் 1997 வரை நடந்த பாலியல் வன்முறைக் கொலைச் சம்பவங்கள் பாரிஸ் நகர இளம் பெண்களை குறிப்பாக தனித்து வாழும் பெண்களை பீதியடைய வைத்திருக்கிறது.

அதற்குக் காரணம் இந்த 5 குற்றவியல் சம்பவங்களும் ஒரு கொலை காரனாலேயே செய்யப்பட்டதாக நம்பப்படுவதாகும். கொலை செய்யப்பட்ட எல்லாப் பெண்களும் 20—க்கும் 30—க்கும் இடைப்பட்ட வயதுடையவர்கள். எல்லோரும் தனித்து வாழ்ந்தவர்கள். அதுபோல் எல்லாப் பெண்களுமே பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்ட பின்பே கொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். எல்லா கொலைகளும் கொலை செய்யப்பட்ட பெண்களின் வீடுகளிலேயே நடந்திருக்கின்றன. அவர்களின் வீடுகளிலிருந்த எந்தப் பொருட்களும் களவாடிச் செல்லப்படவோ சேதமாக்கப்படவோ இல்லை. இத்தகைய ஒற்றுமைகளின் அடிப்படையில் பாரிஸ் நகரப் பொலீசார் பாலியல் வெறி கொண்ட ஒரு தனி நபரே இந்தக் கொலைகளுக்கு காரணம் என்ற முடிவுக்கு வந்திருக்கின்றார்கள்.



பிரெஞ்சு மற்றும் ஐரோப்பியப் பத்திரிகைகள், புகழ் பெற்ற அமெரிக்க தொடர் கொலைகாரர்களான எத்திராங்கிலர் (Etrangleur de Boston) புஷ்ஷே து மில்வோக்கி (Le Boucher de Milwaukee) ஆகியோரின் வரிசையில் இந்த மர்மக் கொலைகாரனையும் ஒப்பிட்டு அவனுக்கு BEAST OF BASTILLE என்ற பட்டப் பெயரையும் சூட்டியுள்ளன.





இந்த மர்மக் கொலைகாரனால் முதலில் கொலை செய்யப்பட்ட பெண்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அன்னே நிக்காம்ப் (AGNESNIJKAMP) பாரிஸ் 10 பகுதியிலுள்ள 213 Rue Du Faubourg St. martin என்ற முகவரியில் வசித்து வந்தவள். 10 டிசம்பர் 1994 இரவு இவள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டபின் கொலை செய்யப்பட்டிருந்தாள். அவளது வீட்டில் கொலைகாரனின் இரத்தம் தோய்ந்த காலடித்தடம் கண்டுபிடிக்கப்பட்டது. அந்தத் தடத்தில் கால் பெருவிரலைவிட 2—வது விரல் நீளமாக இருந்தது. இதன் அடிப்படையில் இது எகித்திய மாதிரி காலடி என்ற முடிவுக்கு பாரிஸ் புலனாய்வுப் பொலீசார் வந்தனர்.

அடுத்து எலிசபெத் ஓ (ELISABETH O) என்பவள் 16—ஜூன் 1995—ல் இந்த மர்மக் கொலை காரனின் தாக்குதலுக்குள்ளானாள். ஆனால் அதிஷ்டவசமாக அவள் உயிர் தப்பிவிட்டாள். அவள் மட்டுமே அந்தக் கொலைகாரனை அடையாளம் காட்டக்கூடிய ஒரே சாட்சி. எலிசபெத் பொலீசாருக்கு தெரிவித்த தகவலின்படி அந்தக் கொலைகாரன் பார்ப்பதற்கு கிரிமினல் ஆசாமி போல் இல்லை. பாரிஸ் நகரத்தின் பிரச்சினைக்குரிய குடியிருப்புகளில் வசிப்பவன்போலத் தெரியவில்லை. அவனுடைய நடை உடை பாவனையெல்லாம் மேற்தட்டு வர்க்கத்தினருக்கு உரியவைபோல இருக்கின்றன. அவன் பேசுகின்ற போது கூட மிகவும் மரியாதையாகப் பேசுகின்றான். ஒரு கெட்ட வார்த்தை கூட அவனது பேச்சில் வரவில்லை. அதுபோல் அவனது பிரெஞ்சு உச்சரிப்பில் பிறமொழிச் சாயலோ அல்லது பிரான்சிலுள்ள பிரதேசச் சாயல்களோ கூட இல்லை. மிக சரளமாகவும் தெளிவான உச்சரிப்புடனும் பிரெஞ்சு பேசுகின்றான்.



அடுத்த கொலை 8 ஜூலை 1995—ல் நடந்தது. கொலை செய்யப்பட்ட பெண்ணின் பெயர் ஹெலன் பிறிண்டிங் (Helene Frinting) இதுகூட பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டபின் செய்யப்பட்ட கொலைதான்.

1996—ல் திடீரென்று கொலைகாரனைக் காணவில்லை. அவன் எச்சரிக்கையாகிவிட்டான். இக்காலப்பகுதியில் அவன் எந்தக் கொலையும் செய்ததாகத் தகவல் இல்லை.

ஆனால் 1986—ல் கணக்கைச் சேர்த்து 1997—ல் இரண்டு கொலைகள், முதல் கொலை 23 செப்டம்பர் 1997ல் நடந்தது. மகலி சிரோட்டி (Magali Siroti) என்னும் பெண்ணே கொலை செய்யப்பட்டவள். வழக்கம் போல இதுவும் வன்முறைக்குப் பின் செய்யப்பட்ட கொலைதான். அடுத்தது எஸ்தல் மக் (Estelle Magd) இவள் 16 நவம்பர் 1997 கொலை செய்யப்பட்டாள்.

இதனையடுத்து பாரிஸ் பொலீசார் கொலைகாரனைக் கண்டுபிடிப்பதில் அக்கறை காட்டவில்லை என்று கொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்களும் பத்திரிகைகளும் கூட அதிருப்தி தெரிவிக்க, 1997 நவம்பர் மாதக் கடைசியில் பாரிஸ் பொலீசார் பத்திரிகைகள் மூலம் தாங்கள் சேகரித்த தகவல்கள் மூலம் உருவாக்கப்பட்ட கொலைகாரனின் கொம்பியூட்டர் மாதிரிப்படத்தை வெளியிட்டனர். அத்தோடு கொலைகாரனுக்கு 25 முதல் 30 வயது இருக்கலாம் என்றும், 1,75M முதல் 1,80 M வரை உயரமுள்ளவன் என்றும் அநேகமாக அவன் வட ஆபிரிக்க இனக்குழுவொன்றை (கறுப்பு நிறத்தவன் அல்ல) சேர்ந்தவனாக இருக்கலாம் என்றும் அறிவித்தனர்.

இப்படிப்பட்ட ஒரு ஆளை அங்கே பார்த்தோம், இங்கே பார்த்தோம் என்று ஏராளமானோர் பொலீசாருக்கு தகவல் தந்தனர். பாரிஸ் நகர மெத்திரோவில் பயணம் செய்பவர்கள் 10 தடவைகளுக்கு மேல் அவனைப் பார்த்ததாக தெரிவித்தனர். ஆனாலும் அந்தத் தகவல்கள் எல்லாம் ஏதோ ஒரு விதத்தில் குறைபாடுகளைக் கொண்டதாக இருந்தது.

இறுதியில் கொலைகாரனை நேரில் கண்ட 'எலிசபெத் ஓ' வை ஒரு காரில் ஏற்றிக்கொண்டு பாரிஸ் பஸ்தில் (Bastill) பிரதேசத்தின் சந்து பொந்தெங்கும் பொலீசார் அவனைத் தேடி அலைந்தனர். ஆனால் அவனைக் கண்டுபிடிக்கவே முடியவில்லை. ஆனால் எலிசபெத் தன்னைத் தேடி பொலீசாருடன் அலைந்ததை அவன் பார்த்திருக்கின்றான். அன்றிரவே அவளுக்கு கொலை மிரட்டலும் விடுத்திருக்கின்றான்.

இன்னும் அந்தக் கொலைகாரன் கண்டுபிடிக்கப்படவேயில்லை. பொலீசாரின் தேடுதல் நடவடிக்கைகள் தொடர்கின்றன. அதுபோல் அவனைப் பற்றிய மர்மமும் தொடர்கின்றது. தனிமையில் வாழும் இளம் பெண்கள் தங்கள் வீட்டு வாசல் கதவுகளுக்கு மேலதிகமாக இன்னொரு பூட்டை பூட்டி வைத்திருக்கிறார்கள்.

# பாரிஸ் நகரம்

★★★



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சுப்பிரீம் கோட் சுறுக்கர் அம்மான்......

## கொழும்பிலிருந்து குமுறுகிறார்

வணக்கம்..... பிள்ளையள்,

முதல்ல...இந்த சுறுக்கர் அம்மானின் புதுவருடப் பொங்கல் வாழ்த்துக்கள். எனக்குப் பிள்ளையள் அறுபத்தியஞ்சு வயதாப்போச்சு. எண்டாலும் என்ரை மன உறுதிக்கு இன்னும் வயசாகிப் போகேல்லை. என்ரை இனத்திற்கு இந்த வயசிலையும் ஏதாவது செய்ய வேணுமெண்ட நினைப்பில, பாலத்திற்கு பாலமாய் இருக்க விரும்பி எழுதுறன்.




கொழும்பைப் பொறுத்தவரை கொஞ்சம் கவனமாய்த்தான் நடக்க வேணும், ஏதாவது ஏடாகூடமாய் நடந்தால், எந்த நேரமெண்டு இல்லாமல் நாலாம் மாடியைப் பார்க்க வேண்டி வரும். சொன்னாப்போல, இஞ்ச நாட்டு நடப்புகள் தடல்புடலாய் இருக்கு. எல்லாரும் ஏறின குதிரையில சக்கடத்தாரும் ஏறினபோல, சமாதானத் தேவதையும் சமாதான இரைச்சலோட பதவிக்கு வந்தாள். ஆனால் பிறகுதான் தெரிஞ்சுது இது வரேல, வந்த பேயை விட, இது மோசமான பிசாசு எண்டு. அட.... சொல்லுறாள் செய்யிறாள் இல்லை. செய்யிறாள் சொல்லுறாள் இல்லை. தீர்வுப் பொதியெண்டு நாறிப்போன பார்சலாம்.... அதைவைச்சு உலகத்தை ஏமாத்திறாள். இனியெங்க....அந்தப் பொதிய ஏதாவது ஆத்துக்குள்ள தூக்கிப்போட வேண்டியதுதான்.

அட எனக்கு வர்ற கோவம் என்னண்டால், இவள் பாவி பொன் விழாக் கொண்டாடப் போறாளாம். இஞ்ச எங்கடை சனம் குந்த இடமில்லாமல், சாப்பிட வழியில்லாமல் அகதிகளாய் அலையுதுகள். குண்டுவீச்சும் செல்லடியும் தமிழனை நரபலி எடுக்குது. யாழ்ப்பாணத்தில.... சனத்துக்கு நிம்மதியாய் மூச்சு விடமுடியாமல் இருக்குது. இந்த இலட்சணத்தில பெடிச்சிக்கு பொன் விழாத் தேவையாம். எல்லாத்துக்கும் பிள்ளையள் இவள் நினைச்சாப்போல ஏதும் நடக்குதே! எல்லாத்துக்கும் எங்கடை வேலற்றை மகன் விருப்பம் தெரிவிக்கணுமே. பொறுத்திருந்து பார்ப்பம்.

அதோட பிள்ளையள் கொதகு கம்பனி, வலு புளுகில யாழ்ப்பா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ணம் திருவிழாவுக்குப் போயிற்றி னம். இவங்களெல்லாம் விட்டு வாங்கியள். என்ன யோக்கியத்தில இந்த மண்ணில கால் வைச்ச வங்கள், மானம் கெட்ட பிறவியள். பாருங்கோ பிள்ளையள் எங்கட சனம் அங்க, விளக்குமாத்துக் கட்டோட நிக்குதுகள். செமைச் சாத்தல் வாங்கப் போயினம். எட..... நாசமறுப்பாரே..... யாழ்ப் பாணத்தில அதுகள் நூற்றுக்கணக் கில பெத்த பிள்ளையளை துலைச் சுப் போட்டு வேதனேலே திரியுது கள். பெண் புரசுகள் நிம்மதியாய் வெளில போகமுடியாத நிலமை. காணாமல் போனதுகளை நிலத்தி லிருந்து தோண்டி எடுக்கிற துக்கம் தொண்டையைக் கட்டும் நிகழ்வு கள்... நாட்டைக் காக்க புறப்பட்டு வித்தாகிப் போன, எங்கடை நெருப் புக் குஞ்சுகளின், உறங்கும் இல் லத்தை உழுதுதள்ளிப்போட்டாங் கள். இந்த நேரத்தில வாக்குக் கேட்டு வயித்தை நிரப்ப வால றுந்த கூட்டம்போயிருக்குதுகள். இவங்கட இந்த வேலை, செத்த வீட்டில தாலிகட்ட அடம்பிடிக் கிறமாதிரி இருக்கு. என்ரை.... நல்லூரானே! என்னதான் நடக் குமோ தெரியாது. போக போக்க றுவார் எக்கச்சக்கமான ஆயுதங்க ளோட போயிருக்குதுகள். பாருங்க... ராசாக்கள் சொந்த மக்களட்டைப் போகும் லட்சணம் எப்படியெண்டு. இந்தக் கழுகுப் புத்தி காட்டேரி சொல்லுறாள் எண்டுபோட்டு, அவளின்ர சூழ்ச்சி தெரியாமல் எங்களின்ரை நக்குவாரங்களும் வெளிக்கிட்டுப் போட்டுதுகள். நல்ல காரணங்கள் வேற சோடிக் கிறாங்கள். இராணுவம் பாது காப்பு தரமறுத்துப் போட்டுதாம். புலியள் நடமாட்டம் இன்னும் யாழ்ப்பாணத்தில இருக்குதாம். அதால பாதுகாப்புக்கு ஆயுதங்கள் தேவைப்படுதாம். இதுக்குள்ள அப்புக்காத்து கூட்டம் புத்தியாய் நழுவிற்றினம். நழுவிறதும் வழுவிற தும் அவைக்கு சொல்லியா கொடுக்க வேணும். பொறுங்கோ பிள்ளையள்... தேர்தல் விழா இன்னும் வடிவாய் சூடு பிடிக் கேல்லை... அங்கையும் அமர்க்க ளம் இல்லாமல் போகும்.

சொன்னாப்போல பிள்ளை யள், போன மாசம் களுத்துறைச் சிறைச்சாலைக்குள்ள சிங்களவன் செய்த நரபலி வேட்டையை சொல்லாமல் விர்றதா? இவங்கள் தம்பியவை வடிவாய் செற்றப் பண்ணி செய்துபோட்டாங்கள். என்ன கொடுமையெண்டால், இந் தப் படுகொலையைப் பற்றி வாக் குக் கேட்க யாழ்ப்பாணம் போற வடிகட்டினதுகளோ, அல்லாது போனால் அப்புக்காத்துக் கூட் டமோ தங்கட வரம்புக்கு எட்டிய வரை காரசாரமாய் எதிர்க்காதது தான். நான் அறிஞ்சு பார்த்ததில ஒரு சிங்கள எம்பி குரல் கொடுத் திருக்கிறார்; அதுவும் பின்பக்க அரசியல் லாபம் கருதித்தான். அதுவும் இந்தப் படுகொலைக்கு தீர்ப்பு குடுக்கிறமாதிரி தமிழ்மக்க ளுக்கென்று தனியான சிறைச் சாலை ஏற்படுத்தவேணுமெண்டு சொல்லிப்போட்டார். நல்ல சோக் கான தீர்ப்பு. அவர் தனியான அரசு எண்டதை, தனியான சிறைச்சாலை எண்டிட்டார் போல கிடக்கு.

அடுத்த... நல்ல சுப்பர் விசயம் என்னண்டால், பாதை திறக்க மாமன்காறன் பெரிய துறப்போடை போகப்போறாராம். சீனாவில இருந்து கப்பல்ல கன அளவுள்ள சாவிக்கொத்துகள் வந்தவுடன இறுதித் திறப்பு முயற்சி நடக்கப் போகுதாம். நடக்கப் போறது என் னண்டால் பிள்ளையள்... முழுச் சாவிக் கொத்தையும் எங்கடை வேலற்ற மகன் எடுத்துப் போடு வான். பாதை திறக்கப் போனவை திரும்பி வருவினம். ஆனால் அவை வரேக்குள்ள.... இரத்மலா னையிலிருந்து அம்புலன்ஸ் வண்டி யள் சத்தம் போடும். என்ன ..கொழும்பில இருக்கிறநாங்க ..... கொஞ்ச பயத்தோடையும் வெளிக் காட்ட முடியாத சந்தோஷத் தோடையும் மெல்ல யன்னலுக்குள் ளால தலையை நீட்டுவம் அவ்வள வுதான். வேறென்ன அடுத்த தபால்ல சந்திப்பம்.

***

# கால்களின் நீளம்

டக்ளஸ் என்ற அறிஞர் மிகவும் குள்ளமான தோற்றம் உடையவர். ஒரு முறை அவர் ஆபிரகாம் லிங்கனிடம் உரையாடிவிட்டுச் சென்றார்.

அப்பொழுது அங்கு வந்த லிங்கனின் நண்பர்கள் டக்ளசைக் கிண்டல் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் லிங்கனைப் பார்த்து "மனிதனின் கால்கள் பொதுவாக எவ்வளவு நீளம் இருக்க வேண்டும்?" என்று கேட்டார்கள். "உடலில் இருந்து தரையைத் தொடுமளவு நீளம் இருக்க வேண்டும் என்று பதில் தந்தார் லிங்கன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தேடலும்

பெண்கள் வாழ்வில் முக்கிய அங்கம் வகிக்கும் நெற்றித்திலகம் (பொட்டு) அழகு சாதனமா? பண்பாட்டுச் சின்னமா?

பெண்கள் இன்று நேற்றல்ல பண்டைய காலந்தொட்டே நெற்றியில் பொட்டு வைப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளதை எமது சங்க இலக்கியங்கள் வாயிலாக அறியக்கூடியதாயுள்ளது. பெண்கள் பொட்டு வைப்பதற்கு பலவிதமான காரணங்கள் கூறப்பட்டாலும் பெண் என்றதும் நாம் உருவகப்படுத்துவது ஒரு பொட்டில்லாத பெண்ணையா? பொட்டு வைத்துள்ள பெண்ணையா? இந்தக் கேள்விக்குக் கிடைக்கும் விடையே, பொட்டு வைப்பது பண்பாடுதான் என்பதை விளக்குகின்றது.

தமக்கு அழகு என்பதற்காக நாகரீகம் என்ற பெயரில் உடை உடுத்தும் பெண்கள் கூட, பொட்டு வைப்பதை அநாகரீகமாக எண்ணுவதில்லை ஏனெனில் பொட்டு வைப்பது ஒரு பண்பாடாகி உள்ளதாலேயே ஆகும். பெண் தெய்வங்கள் கூட பொட்டுடன் தான் சிலை வடிக்கப்பட்டுள்ளன. இதற்குக் காரணம் கலைஞனின் கற்பனையில் பெண் என்றதும் பொட்டும் நினைவிற்கு வருவதேயாகும்.

குழந்தைகளில் ஆண் பெண் பேதமின்றி, பொட்டு வைப்பது எமது வழக்கமாகி, இன்று மரபாக வந்துள்ளது. சுமார் ஐந்து வயது மட்டும் இருபாலருக்கும் வைக்கும் பொட்டு பின்பு பெண்களுக்கு மட்டும் என வழக்கப்பட்டுள்ளது.

மேலும் பெண்கள் நெற்றியில் பொட்டு வைப்பதால் பொட்டு வைக்கும் இடம் (நெற்றிப் பொட்டு) மறைந்துவிடுகிறது. இதனால் பெண்களை வசியம் செய்வதற்கும் இயலாது போகும்

## விவாத

எனவும் கூறுகின்றனர்.

திருமணமாகும் முன் கறுத்தப் பொட்டு வைக்கும் பெண்கள் திருமணத்தின் பின் சிவப்பு பொட்டு வைக்கின்றனர். முன்பு இது குங்குமமாக இருந்து இப்பொழுது ஒட்டுப்பொட்டாக மாறியுள்ளது. எதுவாயினும் ஒரு பெண்ணின் நெற்றியைப் பார்க்கும் பொழுது இவர் திருமணமானவரா? இல்லையா? என்பதைத் தெரிந்து கொள்ள பொட்டின் நிறம் உதவுகின்றதல்லவா?

இன்று பெண்களின் முன்னேற்றம் தொடர்பாக எத்தனையோ சிந்தனைத் தெளிவு ஏற்பட்டாலும் கூட பொட்டு வைப்பதையிட்டு எதுவித கருத்து மோதல்களும் ஏற்படவில்லை. கணவனை இழந்த பெண்கள் பொட்டு வைக்கக் கூடாது என்று வாதப்பிரதிவாதங்கள் நடந்திருக்கின்றனவே தவிர பெண்கள் பொட்டு வைப்பதையிட்டு எதுவித கருத்து மோதல்களும் இடம்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெறவில்லை. காரணம் பெண்கள் பொட்டு வைப்பது என்பது பண்பாடாகமாறி விட்டது என்ப தால்தான். முதலில் பொட்டு வைத்த பெண் அழகுக்காக வைத்தி ருக்கலாம், ஆனால் இன்று அது பண்பாட்டு சின்னமாகத்தான் உள்ளது என்பது எனதுகருத்தாகும்.

எஸ். கருணாவதி
மாங்குளம்
தமிழீழம்.




# அரங்கு

வாசகர்களே

தேடலும் தெளிவும் விவாத அரங்கப் பகுதியிலே உங்களின் கருத்துக்களை தேடி எடுத்து எழுதுவ துடன் அதற்கு உங்களின் ஒரு தெளிவான முடிவினையும் சுட்டிக் காட்டி எழுதினால் நாம் பாலம் சஞ்சி கையில் மாதாமாதம் பிரசுரிக்க சுலப மாக இருக்கும் என்பதைத் தெரிவிக் கின்றோம்.

★★★

## அரிச்சந்திரன்

அரிச்சந்திரன் சுடலை காத்துக் கொண்டிருந்தபோது, அந்தச் சுடலைக்கு ஏராளமான பிணங்கள் கொண்டுவரப்படுவதைக் கண்டான்.

எந்தப் பிணத்தைப் பற்றியும் அவன் விசாரிப்பதில்லை, பணத்தை மட்டுமே வசூலித்தான்.

ஒரு பிணத்தைப் பார்த்ததும் அதைப் பற்றி விசாரிக்க வேண்டும்போல் தோன்றிற்று.

பிணம் தூக்கி வந்தவர்களிடம் கேட்டான்;

"ஐயா, இது யாருடைய பிணம்?"

"இந்த ஊரிலுள்ள பணக்காரர்களில் இவரும் ஒருவர்; வட்டிக்குப் பணம் கொடுப்பது இவருடைய தொழில்."

அரிச்சந்திரன் அமைதியாகத் தலையை அசைத்தான்.

பிணத்திற்கு நெருப்பு மூட்டிவிட்டு அவர்கள் சென்றார்கள்.

சிறிது நேரத்தில் நெருப்பின் வேகத்தால் நரம்புகள் இழுக்கப்பட்டுப் பிணம் எழுந்து உட்கார்ந்தது.

அரிச்சந்திரன் கத்தினான்:

"வட்டி வசூலாகி விட்டது."

பிணம் மீண்டும் படுத்துக் கொண்டது.

–கவியரசு கண்ணதாசன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உணர்ச்சிகளை உள்ளத்தால் புரிந்து கொள்ளுங்கள்

அந்தநாள் நண்பகல் 12.30 மணி தகதகத்து எறிக்கும் மதிய வெய்யில் பொழுதில் வியர்த்துச் சோர்ந்த நிலையில் விறுவிறுத்து நடந்து வந்து வீட்டிற்குள் நுளைகின்றான் தங்கன். சாந்தி தங்கனின் அழுக்கு உடைகளை தோய்ப்பதற்காக வாசலின் ஒரு பகுதியில் அவனது உடைகளை குவித்து வைத்திருக்கிறாள். இதனை கண்டு கொண்ட தங்கன் அந்த இடத்திலேயே உரக்கக் கத்திப் பேசி ஆத்திர மேலீட்டால் சாந்தியை அடிக்கவும் வருகிறான். இது சமூக நடைமுறை, யதார்த்தத்தில் ஏற்பட்ட இயங்கியல் தொழிற்பாடு. உண்மையில் இந்த விடயம் ஒருவருக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தக் கூடிய விடயம் என்றால் இல்லை, அப்படியாயின் தங்கன் ஆத்திரப்படும் வகையில் அங்கு என்ன நடந்தது.



உண்மை இதுதான் அதிகாலை 4.00 மணிக்கு எழுந்து துவிச்சக்கர வண்டி எடுத்துக் கொண்டு வவுனியாவிற்கு பொருட்கள் எடுக்கச் செல்கின்றான் தங்கன். அங்கு அவன் எதிர்பார்த்த அளவுக்கு பொருட்கள் கிடைக்கவில்லையாயினும் கிடைத்த பொருட்களை எடுத்துக்கொண்டு வரும்போது வழியில் அவனுடைய மிதி வண்டி உடைகிறது. சரி இப்போது அவன் பொருட்களை பஸ்ஸில் போட்டுக் கொண்டு வீட்டிற்கு வருகிறான். வரும் வழியில் பஸ்ஸில் தான் சிரமப்பட்டு வாங்கிய ஒரு பொதியைக் கள்வனுக்குக் கொடுத்து விடுகிறான். இதனால் ஏற்பட்ட மன உளைச்சலினாலும் தான் வெய்யிலில் அலைந்த களைப்பு சோர்வினாலும் ஏற்பட்ட உணர்ச்சி மாற்றமே அவனது கோபத்தின் பிரதிபலிப்பு.

இப்போது இப்படியான ஒரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சமூகவியல் நடைமுறை வழக்கை வைத்துக் கொண்டு ஒவ்வொருவரது தனிமனித உணர்வுகளையும் எமது மன உணர்வுகளையும் அறிந்து கொள்ளும் விதத்தை கவனிப்போம்.

உண்மையில் மனிதர்கள் யாவரும் உணர்வுகளால் உரம் பெற்றவர்கள் இந்த உணர்வுகளே இன்பத்தையும், துன்பத்தையும் விளைவிக்கின்றன. தம்மைச் சுற்றிய வெளி உலகில் நண்பர்களையும் பகைவர்களையும் தோற்றுவிக்கின்றன. நாம் வெளிப்படுத்துகின்ற உணர்ச்சிகளின் மூலம் வெளிச்சூழலில் வெவ்வேறு விதமான அபிப்பிராயங்களை ஏற்படுத்துகின்றன.

ஓர் இடத்தில் எம்மை நல்லவர் எனக்கூறும் தனிநபர் அல்லது குழுமம். இன்னொரு இடத்தில் இன்னொரு நேரத்தில் இன்னொரு சந்தர்ப்பத்தில் எம்மைத் தீயவர் எனக் கூற இந்த உணர்ச்சிகளின் தொழிற்பாடு துணைநிற்கின்றது. எனவேதான் உணர்வுகளைப் புரிந்து கொள்வது என்பது மிகவும் சிரமமான ஒன்று. நாம் ஒவ்வொருவரும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஒரேவிதமான மனப்பாங்கைக் கொண்டிருக்க மாட்டோம் என்பதை முதலில் நாம் அனைவரும் கருத்தில் கொள்ள வேண்டும்.

நாம் இருக்கின்ற இடம் காலம், சந்தர்ப்பம், சூழ்நிலை போன்றவையே ஒருவரை வாழ்த்தவும் தூற்றவும் துணைபோகின்றது. ஒருவர் ஒருவரைத் திட்டுவதும் கண்டிப்பதும் தினம் நடக்கக்கூடிய ஒன்று. ஆயினும் அவை யாவும் எடுத்த எடுப்பிலேயே ஒருவரை உதறித்தள்ளிவிடுவது என்று பொருள்படாது.

மாறாக அக்கணமோ அல்லது மறுநாளோ மீண்டும் உறவுகள் ஒன்று சேர்ந்து விடும். எனவே ஒரு சூழ்நிலையில் ஏற்படுத்திய மனநிலை மாற்றம் ஒருக்காலும் நிரந்தரமாகாது.

ஒருவர் தன்னையும் தன் உணர்வுகளையும் புரிந்து கொள்ளல் என்பது மிகவும் சுலபமான விடயமாகும். ஒருவர் தன்னைப் பற்றி முதலில் புரிந்து கொள்வதே மிகவும் சிரமமென்றால் மற்றவர்களின் மனங்களையும் உணர்ச்சி வெளிப்பாட்டையும் புரிந்து கொள்வதென்பது மிகவும் சிரமம்தான். இருப்பினும் அவரது மனப்பாங்கின் வெளிப்பாடு தோன்றிய இடம், சந்தர்ப்பம் என்பவற்றை அறிந்து அதற்கேற்ற வகையில் எம்மை அசைத்தும் நெழித்தும் விட்டுக்கொடுத்தும் புரிந்துகொண்டும் நடக்கத் தலைப்பட்டால் எம் மத்தியில் பிரச்சினைகள் எழுவதென்பதே அரிது.

எம் உணர்வுகளை புரிந்து கொள்வதற்கு இரண்டு வழிவகைகளை கையாளலாம்' முதலாவதாக வாய்மொழி மூலம் வெளிப்படுத்துகின்ற மனப்பாங்கு. இதைப் புரிந்து கொள்வதென்பது மிகவும் இலகுவானது. நாம் அனைவரும் அண்ணன் தங்கை சகோதரங்களாக, கணவன் மனைவியாக, நெருங்கிய உறவுகள் சொந்தங்களாக இருந்து ஏதோ ஒரு மகிழ்ச்சிகரமான சம்பவம் நடந்தபோது வெளிப்படுத்துகின்ற சந்தோஷமான மனப்பாங்கின் போது இடையில் ஒருவர் பாரதூரமான வார்த்தை ஒன்றை பேசுவதனால் அதே வார்த்தை அந்த இடம் சந்தர்ப்ப சூழலில் பெரிதாகத் தெரிவதில்லை. இதற்கு எதிர்மாறாக அவர்கள் மனம் சோர்ந்து கவலையில் துவண்டு இருக்கும்போது அப்படிப்பட்ட பாரதூரமான வார்த்தை ஒன்று கூறியிருப்பாராயின் அதன் விளைவு பெரும் ஆபத்தையே கொண்டுவரும்.

எனவே ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் நாம் பேசும் போதும் பழகும் போதும் சந்தர்ப்பத்திற்கேற்ப நடந்து கொண்டால் மற்றவர்களின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்தால் எமக்கு வாழ்வில் வெற்றிதான்.

அடுத்து செயலின் மூலம் ஒருவர் வெளிப்படுத்துகின்ற உணர்ச்சி மாற்றத்தை வைத்துக் கொண்டு அவரது நிலைமைக்கேற்ப பேசிப் பழகும் திறமையையும் எம்மில் வளர்த்துக் கொள்ளல் வேண்டும். அதிக வெப்பம் காரணமாக நீரின்றி வாடும் ஒரு பயிரிற்கு நீர் ஊற்றி உரமிட்டு வளர்ப்பதன் மூலம் அது எவ்வளவு பசுமையாக இருக்குமோ அது போன்றே ஒருவருடன் வைத்துக் கொள்ளும் நல்ல தொடர்புகள் அவரையும் எம்மையும் பசுமையாக வைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஒருவரது மனம் சந்தோஷமாக இருக்கும் போது அவரது முகம் மலர்ச்சியடையும். நடை, உடை பாவனையில் துடிப்பிருக்கும், தன்னம்பிக்கை காணப்படும். அதே வேளையில் அதே நபர் சோகமாய் இருந்தால் முகம் காய்ந்து சோர்ந்திருக்கும். தூக்கம், பசி இருக்காது தான் கதைத்தது செய்தது சரியோ தவறோ இதனால் ஏதாவது தீங்கு நேருமோ என்ற பயப் பிராந்தி காணப்படும். கைகள் ஒரே நிலையில் நில்லாமல் பதட்ட நிலையில் காணப்படும். தனிமைக்கு இடம் கொடுக்க வேண்டி இருக்கும்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் நாம் அவர் மீது அன்பாகவும் தாயைப் போன்ற பரிவுடனும் பழகுதல் நன்மையானதாகும். இல்லையெனில் சில சந்தர்ப்பங்களில் அவர் மன நோயாளியாக மாறுவதற்கும் சந்தர்ப்பமுண்டு.

திடீரென எமக்கு ஏற்படும் மனப்பாங்கின் மாற்றத்தின் விளைவாக நாம் உடனே முடிவுகளை எடுத்தல் கூடாது. அவ்வாறான முடிவுகள் பெரும் ஆபத்திலேயே கொண்டு விடும். ஒரு முடிவை எடுப்பதற்கு முன் இரு தடவைகள் சிந்திக்க வேண்டும். இவை எமக்கு வரும் துயரங்களை மாற்றி அமைக்கும் உங்களது மனங்களில் ஏற்படும் தாக்கங்களை கண்டவர்களிடமெல்லாம் உளறுவதை விடுத்து உங்களுக்கு மிகுந்த நம்பிக்கையான உங்கள் கணவன், மனைவி, நண்பன், காதலர்களிடம் கூறி அதற்கான பரிகாரத்தையும் தேடிக் கொள்ளலாம்.

சுருங்கக்கூறின் உணர்வுகளையும் நீங்கள் முழுமையாக நம்புபவர்களிடம் மட்டுமே பரிமாறிக் கொள்ளுங்கள். அதே போன்று அடுத்தவரது உணர்வுகளையும் புரிந்து கொண்டு மதிப்பளியுங்கள். உங்களால் நிகழ்த்தப்படும் ஆச்சரியங்களையும் நீங்களே சிந்தித்து அது எவ்வாறு ஏற்பட்டது? ஏன்? என்பதை ஆராய்வதன் மூலம் உங்களது உணர்வுகளைப் புரிந்து கொள்ளலாம். போதுமா? இப்போது உங்களதும் மற்றவர்களதும் உணர்ச்சிகளை உள்ளத்தால் புரிந்து கொள்வீர்களே?

அழ.இனியவன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பாலம்

நாளொடு பொழுதும் கடந்தே வான் போயின
ஊரொடு எழுந்து இடம் பெயர்ந்து வந்து
தினசரி விடிகையில் உன் மடல் தேடி
பகலது முடிகையில் விழியது சோர்வதாய்
நாட்கள் கடந்தேதான் போயின
ஒன்றல்ல இரண்டல்ல நூற்றுக்கணக்கில்
பொழுதுகள் போயின......
ஆயினும் உன் மடல்?......
பிஞ்சொடு பூவும் தினம் தினம் சாகுது
வெண்களம் தன்னில் பொருதியே மடியுது
எங்களின் மனங்களோ உலைக்களம் ஆகுது
தங்கி எதிலும் நிலைத்திடாமல்
தவித்தலையிது நினைவு
குயில் கூவப் புலர்ந்த பொழுதுகள்
கனவென ஆயின
ஷெல் கூவித் துயிலெழுப்பும் காலமிது
மானிடரை ஓர் கணத்தில்
சிதைத்தெறியும் கோரமிது
கிபீர் வந்தால் மனது பகீர் எங்கும்
ஒரு குண்டில் இருப்பிழக்கும்
மனிதங்கள் எண்ணேலா
பெயரறியா வருத்தங்கள்
ஒரு நூறு உலவு திங்கே- எம்
துயரறியாச் சிறீலங்கா
மருந்தெதையும் விடுகுதில்லை
பார்த்திருக்கப் பல சாவு
அடுக்கடுக்காய் நிகழுதிங்கே
பாழும் மனம் பரிதவித்து
எதையெதையோ எண்ணுதிங்கே
இடைவேளை கிடைக்கையிலோ
ஆதரவாய் உளமாற
அன்பான உன் மடலை
அழகான கையெழுத்தைத் தேடி
மனம் தவிக்கிறது
வேதனையும் விரக்தியுமே வேரோடி நிற்கிறது
வடிவான வாழ்க்கையதன் கற்பனைகள்
வர மறந்து
அழுகையுடன் உயிர் பிடித்து
வைத்திருக்கேன் உனக்காக
பதிலொன்று வரைவாயா?
முற்றான முடிவெனக்கு உடன் வேண்டும்
இற்றைப் பொழுதிலேயே
எனைத் தேற்றப் பழக வேண்டும்
சுற்று நிகழும் நிகழ்வு பற்றிச்
சிந்தித்து முடிவொன்றும் எடுக்க வேண்டும்
முடிவொன்று உடன் தேவை
விடியலினை நான் தேட......

**தூயவள்**

# சுதந்திரத்தின் எதிர்பார்ப்புடன்

முரளி டென்மார்க்கில்
உதயன் இந்தியாவில்
சீலன் தடுப்பு முகாமில்
மேரிதாஸ் கல்லறைக்குள்
ராஜூ எங்கெங்கோ?
ஓ நான் மட்டும் தனியாய் இங்கே
முன்பெல்லாம் அந்த மைதானத்தில் கிரிக்கட்
சடுகுடு கெந்தியடித்தோம்
முரளி அளாப்புவான்
உதயன் சிரிப்பான்
சீலன் முறைப்பான்
ராஜூ மிலாந்துவான்
மேரிதாஸின் நியாயத்தில் நாங்கள்
சமாதானமடைவோம்!
இப்போது உள்ளம் வேதனையடைகிறது
அந்த மைதானம் முக்காட்டு முகாம்
மூலையில் சென்றி மண் மூட்டை
எட்டிப் பார்க்கும் துப்பாக்கி குழலின் மேலே
காட்டருமைக் கொம்பாய்
வளைந்து நிற்கும் ரவைக்கூடு
ஊர்ப்புதினத்தில் முரளிக்கு கடிதத்தில்
எழுத நினைக்கின்ற நித்திரைச் சாமத்தில்
நாய்களின் குரைப்பில்
ஓ.... நாளைய சூரியக் குளியலுக்கு
நான் இப்பொழுதே தயாராகிவிட்டேன்!
முரளி டென்மார்க்கில்
உதயன் இந்தியாவில்
மேரிதாஸ் கல்லறைக்குள்
ராஜூ எங்கெங்கோ
நான் மட்டும் தனியாய்
இந்த மைதான வெய்யிலில்
**சுதந்திரத்தின் எதிர்பார்ப்புடன்.......**

**இந்திராணி**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உங்கள் எண்ணத்தில் இருப்பதை அழகிய வடிவத்தில் தரமாகவும், விரைவாகவும், மலிவானதாகவும் செய்து முடிக்க

நவீன தொழில்நுட்ப வசதிகளுடன்......

# THE PRINT



# வாசன் அச்சகம்

45 C Crusoe Road,
Mitcham, Surrey CR4 3LG,
United Kingdom.
Tel: 0181 646 2885



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மாதபலன்

## ஜனவரி 1998

சாத்திரியார்



தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது காலங்காலமாக நமக்கிடையே, புளக்கத்தில் உள்ள நம்பிக்கை வரி. சதா துன்பத்தையும், துயரத்தையும் அனுபவித்துவரும் எம் மக்கள், பிறக்கும் புது ஆண்டிலாவது ஒளி கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் பிறக்கும் ஆண்டை எதிர்கொள்ளுகின்ற வழக்கம் இப்படியானது.

இந்த எதிர்பார்ப்பு, நம்பிக்கை சிங்கள மக்களிற்கும் பொதுவானதோ என்னவோ ஆனால்.... சிறீலங்கா அமைச்சர் ரத்வத்தையைப் பொறுத்தவரை இந்த எதிர்பார்ப்பு ஒரு தாகமாகவே பற்றிப்பிடித்துள்ளது.

ஜெயசிக்குறு ஆரம்பித்து எட்டு மாதங்கள் கடந்துவிட்டன. புதிய காலக்கெடுவும் பெப்ரவரி நான்கிற்கு முன்னர் என கொடுத்தாயிற்று. சிறீலங்காவின் சுதந்திரநாள் பொன்விழாக் கொண்டாட்டத்திற்கு முன்னதாக இந்தப் பாதை திறப்பு நடவடிக்கை வெற்றி பெறுமா? வெற்றிபெற வேண்டும் என்ற வெறி ரத்வத்தையாருக்கு. ஆனால், சீனாவில் இருந்து ஆயுதங்களை ஏற்றியபடி சிறீலங்கா நோக்கி வந்துகொண்டிருக்கும் கப்பலுக்காக அவர் பார்த்துக் கொண்டிருக்கின்றார்.

சொல்லிவைத்தாற் போல் மப்பும் மந்தாரமுமான மழைக்கால இருட்டு, புதுவருடம் பிறந்த கொண்டாட்டத்தில் திளைத்த படையினருக்கும் மப்பு. இந்த ஆண்டின் முதல் நாளை விடுதலைப்புலிகள் நீண்டதூரம் பாய்ந்து தாக்கும் ஆட்டிலறித் தாக்குதலுடன் ஆரம்பித்து வைக்கின்றனர்.

பாதை திறப்புக் கனவுகளுடன் குவிக்கப்பட்ட ஜெயசிக்குறு படையினரின் ஒலுமடுப் பகுதியில் உள்ள நிலைகளை அச்சொட்டாக குறிவைத்து ஏவப்பட்ட செல்கள் வீழ்ந்து வெடித்து புதுவருடதினத்தை கொண்டாட முடியாத ஒரு நிலையை ஏற்படுத்தியுள்ள சிங்களப்படையின் நிலைகள் மீது விடுதலைப் புலிகளின் ஆட்லறி செல்கள் வீழ்ந்து பூமியை அதிரவைக்கும் சத்தத்துடன் வெடிக்கின்றன.

ஏழுபடையினர் கொல்லப்பட்டனர் மேலும் இருபத்திமூன்றுபேர் காயமடைந்தனர்.

இறந்த காயமடைந்த படையினரை ஏற்றிச் செல்ல உலங்குவானூர்தி நிட்சயம் வரும். கணித்து, சிங்களப்படை நிலையின் பாதுகாப்பு வலையங்களை நிதானமாகவும் எச்சரிக்கையாகவும் துணிவோடும் கடந்து, மழைக்கால இருட்டில் மறைந்து தமது இரைக்காக, விடுதலைப்புலிகளின் கரும்புலி அணி காத்திருக்கின்றது. சொல்லிவைத்தாற்போல மறுநாள் இரண்டாம் திகதி மதியம், ஒலுமடுப்பகுதி இராணுவக் கட்டளை அதிகாரியின் பாதுகாப்புக் குறித்த நம்பிக்கையூட்டும் உத்தரவாதத்துடன் வவுனியாவில் இருந்து, அரிசி பருப்பு மீன்ரின் போன்ற பொருட்களை ஏற்றிக்கொண்டு, இறந்த, காயப்பட்ட படையினரை ஏற்றிவர வவுனியாவில் இருந்து புறப்பட்ட எம். ஐ. 17 உலங்குவானூர்தி ஒலுமடுவில் மெல்லத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தரையிறங்கியது.

குறி சரியாகப் பொருந்திவிட்டது. கரும்புலிகள் தாக்குதலைத் தொடுத்தனர். உலங்குவானூர்தி தாக்குதலில் வெடித்து தீப்பற்றி எரிந்தது. சுற்றிவர நின்ற படையினர் ஆளுக்கொரு திசையில் ஓடி ஒளித்தனர். தாக்குதலை நடத்திய கரும்புலிகள் அணி வந்தபோது காட்டிய நிதானத்தை, எச்சரிக்கையை, துணிவைவிட கூடுதலாகவே கடைப்பிடித்து, வெற்றியைச் சுமந்தபடி இழப்புக்கள் இன்றி தளம் திரும்பியது.

இது, 1998-ம் ஆண்டை கட்டியம் கூறுகின்ற தாக்குதல்.

இந்த மாதத்தில் இறுதியில் யாழ்குடாநாட்டில், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்திமுடித்துவிட சிறீலங்கா அரசாங்கம் கடும் பிடியாக உள்ளது.ஐந்தோ பத்தோ பெற்று எப்படியாவது இந்தத் தேர்தல்களில் வெற்றி பெற்று தமது வாழ்வுக்கான பாதையை அமைத்துவிடுவது என்ற நோக்கத்தில் தமிழ்க்குழுக்கள் சிங்கள அரசாங்கத்தைவிட உடும்புப் பிடியாகவே உள்ளன. இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் நடத்திய தேர்தலில், அதன் பிரதான கூலிக்குழுவான ஈ.பி.ஆர்.எல்.எப் இற்கு இருந்த வாய்ப்புகள் போன்று தற்போது இல்லை. சிறீலங்கா இராணுவ ஆக்கிரமிப்பில், ஒவ்வொரு தமிழ்க்குழுக்களினதும் பெறுமதி சிறீலங்கா அரசால் உணரப்படுவதால், ஒன்றை பகைத்து ஒன்றுக்கு ஆதரவு தர சிறீலங்கா அரசாங்கம் முன்வராது. அதனால், தமிழ்க் குழுக்கள் தமக்கிடையே ஏரியா பிரித்து வாக்குப் பிச்சை கேட்கும் விடயங்களில் ஆங்காங்கே மோதிக் கொள்ளுகின்றன. வேலணையில் கைகலப்பு உடைத்த போத்தல் குத்தாக பரிணமித்தது. சுழிபுரத்தில் கிறனைட் தாக்குதலாக அது வளர்ச்சி கண்டது.

ஆனால், ஆயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்ட ஆயுதங்களைக் கொடுத்து,சனநாயகத் தேர்தலை வெற்றி கொண்டு வாருங்கள் என, அனுப்பிவைத்த தமிழ்க்குழுக்களை, சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மன்றாட்டமாகக் கேட்டுக்கொள்வது என்னவென்றால்... தயவு செய்து உங்களுக்கிடையில் மோதிக்கொள்ளாதீர்கள். அது தேர்தலைக் குழப்பி விடும். தங்கள் எல்லோரினதும் நலனை அது வெகுவாகப் பாதித்துவிடும்என்பதே.

★★★

# ஏன் பூக்கிண்ணம் இல்லை?

பேர்னாட்ஷாவின் வீட்டிற்கு நண்பர் ஒருவர் வந்தார். ஷாவின் வீட்டில் அலங்காரத்திற்காகப் பூ வைக்கின்ற பூக்கிண்ணங்கள் எங்குமே இல்லாததைக் கண்டார்.

உடனே அவர் ஷாவைப் பார்த்து "உங்களுக்குப் பூக்கள் என்றால் மிகவும் பிடிக்கும் என்று சொன்னார்கள். ஆனால் உங்கள் வீட்டில் பூக்கிண்ணங்களையே பார்க்க முடியவில்லையே? என்று கேட்டார்.

அதற்கு ஷா "எனக்கு குழந்தைகள் என்றாலும் உயிர்தான் அதற்காக அவர்களின் தலைகளை வெட்டி இங்கு அழகிற்காக வைக்க முடியுமா?" என்று கேட்டார்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விண்ணின்று மீளினும்.......

-பொ.கருணாகரமூர்த்தி

சிறுகதை

சங்கர நாராயண சாஸ்திரிகள் வீட்டின் முன் விறாந்தையில் தன் பூணூலைச் சற்றே தளர்த்தி அதை வயலின் வில்லாக முதுகுக்குக் குறுக்காகப் பிடித்து மேலுங்கீழுமித்துச் சொறிந்து கொண்டு நிற்கவும் பெரிய வணக்கம் போட்டுக் கொண்டு வந்த தபாற்காரன் அவரிடம் இளநீலக் கவரிலான கடிதம் ஒன்றைக் கொடுத்தான். சாஸ்திரி யாரிடம் வழக்கமில்லைத்தான் எனினும் அவரின் சீமந்தப்புத்திரன் அனந்து என்ற அனந்தகிருஷ்ணன் அமெரிக்காவிலிருந்து அனுப்பிய கடிதத்தைப் பார்த்த சந்தோஷத்தில் சிலவேளை சந்தோஷம் (இனாம்) ஏதாவது வெட்டாலாமென்றொரு மெலிதான நப்பாசையில் ஒருவிநாடி அவ்விடம் தாமதித்தான். அவரோ அவன் நிற்பதையே கண்டுகொள்ளாதவராய் ஆவலோடு கடிதத்தைப் பிரித்து ஓசை நயத்துடன் படிக்கத் தொடங்கினார். சல்லி எதுவும் பெயரப் போவதில்லை என்பதை உய்த்துக் கொண்ட தபாற்காரன் மெல்ல அவ்விடங்கழன்றான். சாஸ்திரிகள் கைகள் வாழ்க்கை பூரா தட்ஷிணை, கிராயம், பாகம், காணிக்கை என்று வாங்கியே பழக்கப்பட்டவையன்றி கொடுத்தல் எனப்படும் கிரியையின் பழக்கமோ பரிச்சயமோ இல்லாதவை.

சம்பிரதாய வார்த்தைகள் முடியவும் எடுத்த எடுப்பிலேயே அனந்து எழுதியிருந்த விஷயம் அவரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. திடுப்பென ஓசையையும், ராகத்தையும் கட் பண்ணிக் கொண்டு வேறுயாராவது நிற்கிறார்களா என்று சுற்றுமுற்றும் பார்த்தார். பின் ஈஸிச்சேரில் போயமர்ந்து கொண்டு மனதோடு வாசிக்கலானார். மேலே படிக்கப் படிக்க நம்ப அனந்துவா இதை எழுதியது என்று அவரால் நம்பமுடியாமலிருந்தது.

உள்ளூர்ப் புரோகிதர்களுடன் மிக வரட்சியாய் இழுபட்டுக் கொண்டிருந்த அவர்கள் குடும்ப ஜீவனம் அனந்து படித்து ஆளாகி கனிமநிறுவனமொன்றில் உத்தியோகமும், அடுத்த ஆண்டே ஜப்பான் அரசு வழங்கிய ஸ்கொலஷிப்பும் கிடைத்த பின்னாலேயே செழிக்கத் தொடங்கியது. ஜப்பான் படிப்புக்களை முடித்துக் கொண்டு அமெரிக்காவுக்குப் போய் அங்கு பிளாடெல்பியா பல்கலைக்கழகத்தில் கனிமத்துறையில் ஆய்வுகள் செய்யும் ஒரு குட்டி விஞ்ஞானியாகிவிட்ட அனந்துவுமோ சின்ன வயதிலேயே படிப்பில் கெட்டிக்காரன் மாத்திரமல்ல, பெற்றாருக்கு அடங்கின பிள்ளை என்றும் பெயரெடுத்துக் கொண்டவன். இல்லாவிட்டால் தனக்கு முப்பத்தைந்து வயதாகியும் கல்யாணமாகாமலிருப்பதைப் பொருட்படுத்தாமல் இன்னமும் தேமே என்றிருப்பானா. சம்பாதிக்கத் தொடங்கிய பின்னால் இரண்டு அக்காள்மாருக்கும் முதலில் திருமணங்களாகட்டும் பிறகு தான் பண்ணிக்கலாம் என்றுதானிருந்தான். சாஸ்திரிகள் தான் சுமையோட சுமையாய் தங்கச்சி மைதிலியையும் கரையேற்றிவிட்டு கொஞ்சம் நிலம் வாங்கி ஒரு வீடும் கட்டிட்டா நாங்கள் இனிக் குறையொன்றுமில்லை என்று சந்தோஷமாக ஒரு மூலைல ஒக்கார்ந்திடுவோம்......... நீயும் பிறியாயிடுவாய் ராஜா என்று சொல்லிக் கொண்டு அவன் வாழ்க்கை அஜந்தாவில் நிகழ்ச்சிகளை மேன்மேலும் புகுத்தியதால் அவனும் ஆணைகாட்டில் அனலையும் விழுங்குவேனென்று விழுங்கிக்கொண்டுவிட்டான்.

இந்த ஆவணி மாத ஆரம்பத்தில் கோடை விடுமுறை ஆரம்பிக்கிறதாயும் இரண்டு மாதலீவில வருவதாகவும் போனமாசங்கூட எழுதியிருந்தான். இந்த முறை அவன் திருமணத்தை முடித்தே தீருவதென்று சா திரியாருங்கூட நல்ல பசையுள்ள இடமாகப் பார்த் ஐந்தாறு ஜாதகங்களும் வாங்கிப் பொருத்தமெலாம் பார்த்து வைத்துக் கொண்டு எந்தப் பெ ணைப் பிடிக்கிறதோ அவனே வந்து தேர்வு செய்யடும் என்றுதயாராகத்தானிருக்கிறார்.

அதற்குள்ளாக அவனிப்போது எழுதியிருப்பன



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வாசிக்க அவருக்கு பெரும் மலைப்பாகவும் நம்ப முடியாமலுமிருந்தது. பாகீ....பாகீ.... என்று உள்ளே மனைவியைக் கூப்பிட்டார்.

என்ன காப்பிதானே சித்தே பொறுங்கோன்னா.. பாகீரதியம்மாள் உள்ளிருந்து குரல் கொடுத்தார்.

'காப்பியுமில்லை மண்ணுமில்ல வந்து அனந்து என்னா எழுதியிருக்கிறான்னு பாரடி'

'ஏன்னா அனந்து கடிதம் வந்துதா ஏர்ப்போட்டுக்கு எப்போவரணுமின்னு எழுதியிருக்கானா'

'ஏய் அசடு அவன் வரப்போறதேயில்லையாம் தான் வேறு பொண்ணு பார்த்திருக்கிறானாம் கூசாமல் எழுதியிருக்கானடி'

'அபச்சாரம்...அபச்சாரம் என்னா சொல்லுறேள் வெள்ளைக்காரியக் கட்டிக்கப்போறானாமா? இது தான் ஐஞ்சு வருஷமுன்னேயே அடிச்சுண்டேன் அவனுக்குமொரு கால்கட்டு போட்டிடலாம்னு கேட்டேளா இனி அடிக்கழுவாதவள ஆத்துல வைச்சு யாரு மாரடிக்கிறது' அலறினாள்.

'அந்தளவுக்குப் போயிடுவானடி நம்ம பய, எல்லாம் இந்தியப் பொண்ணுதான் அதுவும் பிராமணப் பொண்ணுதானாம் ஏதோ பெரிய படிப்பெல்லாம் படிச்சு அமெரிக்காவுல விண்வெளி ஆராய்ச்சி பண்றதாம். என்னென்னவோ எல்லாம் எழுதியிருக்கான்டி நீயே படிச்சுப்பார்' கடிதத்தை நீட்டினார்.

'நேக்கு எங்கேன்னா எழுத்தெல்லாம் தெரியுறது எல்லாம் முகிலாட்டம் புகாரா தெரியுறது சித்த நீங்களே படியுங்கோ'

இதற்குள் ஆபீஸுக்குப் புறப்பட்டுவிட்ட கணவனை வழியனுப்புவதற்காக வெளியில் வந்த மைதிலி அப்பா கையில் வெளிநாட்டுக் கடிதமிருப்பதைப் பார்த்துவிட்டு ஏம்பா அண்ணா கடிதமா என்றாள் ஆவலுடன்.

"அவன் கடிதமல்லடி வேட்டு"

"என்னப்பா சொல்றேள்"

'அற நனஞ்சப்புறம் குளிரென்ன கூதல் என்ன, இந்தா நீயே உரக்கப்படி அவன் எழுதியிருக்கிறத எல்லாரும் நன்னா கேட்கட்டும்' என்று கடிதத்தை அவளிடம் நீட்டினார்.

'என்னப்பா பயமுறுத்தறேள்'

'அட படீன்னா'

அன்பான அப்பாவுக்கும், அம்மாவுக்கும் நமஸ்காரத்துடன் எழுதிக்கொள்வது,

நான் இங்கு சௌக்கியம். அங்கும் உங்களுடைய ஷேமத்திற்கும் பகவான் அருள் பாலிப்பானாக.

இங்கு தமிழ் பெண்ணொருத்தி அஸ்றனோடிக்ஸ்ல பி.எச்.டி எல்லாம் பண்ணிட்டு ஸ்பேஸ் அட்மினிஸ்டிரேஷன் துறையில விஞ்ஞானியாயிருக்கா. சைதன்யா என்று பெயர். சைதுன்னு கூப்படறது. வடமாள், முப்பது வயசு, ஆத்ரேயகோத்தரம், ரோகினி நட்சத்திரம். சமீபத்தில பத்திரிகைலகூடப் படிச்சிருப்பீங்களே விண்வெளிக்குப் போயிட்டு வந்த முதல் இந்தியப் பெண்ணென்று அவதான். இன்டர்நெட் மூலமா அவ நட்புக்கிடைத்தது. அப்புறம் நேரில பார்த்துப் பழகிய பின்னால என்னைக் கட்டிக்க ரொம்ப இஷ்டமாயுள்ளா. அவ ஜாதகத்தின் கொப்பி பின்னிணைத்துள்ளேன். உங்கள் சம்மதம், பொருத்தம் என்பன எப்படியென்று அறிய ஆவலாயுள்ளேன். மைதிலியையும், மைத்துனரையும் ஷேமம் விசாரித்தேனென்று சொல்லவும். பின்னர் விபரமான கடிதம் எழுதுகிறேன்.

இப்படிக்கு உங்கள் அன்பையும் ஆசீர்வாதங்களையும் நாடும்

அன்புமகன் . அனந்தகிருஷ்ணன்.

'என்னா சைதுன்னு கூப்பிடுவானாமா ரொம்பத் தான் நெருங்கிப்பழகிட்டாங்களோ' என்று பாகீரதியம்மாள் நெட்டுயிர்க்க, 'அண்ணா அத்தனை பெரிய ஸ்டாரையே மடக்கிட்டாரா அதிஸ்டக் காரன்தான்' என்று மைதிலி வாயைப்பிளந்தாள்.

அவ உலகம் வியக்கிறமாதிரி பெரிய ஸ்டாராவே இருந்துட்டுப் போகட்டும் ஆனா அது கலியாணத் துக்கெல்லாம் சரிப்பட்டுவராது.

ஏன்னா... பாகீரதியம்மாள் கேட்க எல்லாரும் சாஸ்திரியாரின் முகத்தைப் பார்த்தனர்.

நானும் பேப்பர்ல படிச்சதுதான். மூணு வேத்து ஆம்படையாளோட விண்வெளியில மூணுமாசம் சஞ்சாரம் பண்ணிட்டு வந்த பொண்ணை இந்த ஆத்தில மருமகளாக்கிக்கிறதா....ஹூம்...

'இதென்ன ஸ்பேஸ் ரிசேர்ச்ஸூக்கு ஆத்து ஆம்பளகள கூட்டிண்டெல்லாம் போகமுடியுமா மாமா' என்று மருமகன் சொல்லவும், மைதிலி கலகலவென்று சிரிக்கவும், சாஸ்திரிகள் கண்களில் ஜூவாலை கனன்றது. மாமனின் முறைப்பைப் பொருட்படுத்தாது அவன் ஆபீஸுக்குக் கிளம்பினான்.

சிரிப்பவர்களைப் பற்றியெல்லாம் சாஸ்திரிகளுக்கு கவலையில்லை. மூக்குப் பொடிசிட்டையைத் திறந்து ஒரு சிட்டிகை எடுத்து ஆழமாக உறிஞ்சிவிட்டு லெட்டர்பாடை எடுத்து மேசையில் வைத்துக்கொண்டு நிதானமாக எழுதலானார்.

அருமை மகன் அனந்துவுக்கு,

நீ அனுப்பிய ஜாதகம் பார்த்தேன். அது கொஞ்சமும் உனக்குப் பொருந்தி வரவில்லை. அதோட அந்தப் பொண்ணுக்கு ஆயுசுபலம் வேறு கம்மியாயிருக்கு. அவ விண்வெளிப்பயணம் இதுகளிலயெல்லாம் ஈடுபடுறா என்பதும் அதைத்தான் உறுதிப்படுத்துது. இங்கு உனக்கு ரம்பை ரதிகளாட்டம் பெண்கள் ஐந்தாறு பேரைப் பார்த்து வைத்திருக்கிறேன். விடுமுறைக்கு வந்துபார்த்து ஒருத்தியை நீயே இஷ்டம்போலத் தேர்ந்தெடுத்துக் கொள். திருமணத்தை ஜமாய்த்துவிட நாங்களாய்ச்சு. அம்மாவும் அதுதான் நல்லதுங்கறா.

உனக்கு எல்லா ஐஸ்வர்யங்களும், சௌக்யமும் கிட்ட எம் ஆசீர்வாதங்கள்.

இப்படிக்கு உன்
அப்பா. ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# டாக்டர் பதில்கள்

**கேள்வி:**

நான் காலை, இரவு நேரங்களில் பிரஷ்ஷி னால் பல் துலக்குகிறேன். இருந்தும் என் பற்கள் மஞ்சள் நிறத்தில் உள்ளது இதனால் பிறரிடம் பேசும் போது சிரிப்பதற்குக்கூடத் தயக்கமாக இருக்கிறது. எனது பற்கள் வெண்மையாக விளங்க நான் என்ன செய்ய வேண்டும்?

**பதில்:**

உங்கள் உணவில் வைட்டமின்களும், சுண் ணாம்புச் சத்தும் போதிய அளவில் இருக்காது. பால், தயிர், கீரை வகைகள் சாப்பிட வேண்டும். தவிர உங்களுக்குப் 'பயோரியா' என்னும் ஈறுநோய் இருக்கலாம். பல் டாக்டரிடம் காண் பித்து மாத்திரைகள் வாங்கிச் சாப்பிடுங்கள், அவரே பல் சுத்திகரிப்பும் செய்துவிடுவார்.

**கேள்வி:**

என் கண்களில் மேற்புறமும், கீழ்புறமும் சுருக்கங்களும், வளையங்களும் காணப்படுகின் றன. அதற்குக் காரணமும் நீக்கும் வழிகளையும் தயவுசெய்து கூறவும். வாய் நாற்றமும் உண்டு. நீக்க வழி?

**பதில்:**

வாயில் சொத்தைப் பற்களோ அல்லது பல்லில் பயோரியா போன்ற வியாதிகளோ இல்லையென்பதை உறுதிசெய்து கொள்ளவும். டகூச்சுஷகூநூ அல்லது ஈகஞ்ஞுச்ஙீ 10 சொட்டு 1 டம்ளர் நீரில் விட்டு இரு முறை வாய் கொப்பளிக்கவும். தினந்தோறும் கீரை, பழவகை கள் உட்கொள்ளவும். கண்ணின் கீழ் உள்ள தோல் சுருக்கத்திற்கு யகூஞ்ஹுங்கூநூ Oil (Leesa Oil) போன்றவற்றைச் சருமத்தின் மேல் தடவலாம்.

**கேள்வி:**

எனக்குக் கல்யாணமாகி 15 வருடங்கள் ஆகிறது. வயது 33. ஒரு ஆண் ஒரு பெண் குழந்தை அறுவைச்சிகிச்சை மூலம் பிறந்தது. நான் கருத்தடை சிகிச்சை செய்து கொண்டேன். தற்போது ஆண் குழந்தை இறந்து விட்டது. பெண் குழந்தைக்கு வயது 11. மேலும் நான் ஒரு குழந்தை பெற்றுக் கொள்ள ஆசைப்படுகிறேன். என் கணவருக்கு ஆண் குழந்தை இல்லை என்ற கவலையில் தினமும் குடிக்கிறார். அவர் மனநிலை திருந்தவும் என் வாழ்க்கை நல்ல படியாக அமையவும் நான் மறுபடியும் குழந்தை பெறுவது ரொம்ப அவசியம்.

மறுபடியும் மாற்று அறுவை சிகிச்சை செய்தால் பெற வாய்ப்பு உண்டு என்று அறிந் தேன். உண்மையென்றால் எந்த டாக்டரைப் பார்க்க வேண்டும் என்ற விபரம் கூறுக?

**பதில்:**

தாங்கள் 'ரெகானிலிசேஷன்' செய்து கொண்டால் குழந்தை பிறக்க வாய்ப்புண்டு. ஆபரேஷன் செய்த விதம், செய்யப்பட்ட இடம், எந்தப் பகுதியில் ஆபரேஷன் செய்த முறை ஆகியவற்றைப் பொறுத்துத்தான் வெற்றி காண முடியும். சுமார் 2 சதவீதம் முதல் பத்து சதவீதம் வரை நன்மை ஏற்படும்.

**கேள்வி:**

வயிற்றிலுள்ள கருவின் வயதை எந்த நாளில் இருந்து கணக்கிடவேண்டும்?

**பதில்:** கர்ப்ப காலம் பூரணமாக 9 மாதங்களும், 7 நாட்களும் ஆகும். இந்தக் கணக்கு கடைசியாக மாதவிடாயான முதல் நாளிலிருந்து கணக்கு வைப்பார்கள். இது தவறு. கரு உண்டாகிய பின் கடைசி மாத விலக்கு வந்ததில் இருந்து 36 வாரங்களுக்கு முன் பிரசவம் ஆகி விட்டால் அதைக் குறைப் பிரசவம் என்று கூறலாம்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நூல் வெளியீடு


## அழுகின்ற தேசமும் ஒளிர்கின்ற சூரியனும்




புலம் பெயர்ந்த மண்ணில் கலை இலக்கியங்களைப் படைத்துக் கொண்டிருக்கும் படைப்பாளிகளில் தாயகவிடுதலையையும் தமது நெஞ்சங்களில் இருத்தி தமிழ் இனத்தின் வாழ்விற்காகப் பணிபுரியும் படைப்பாளிகள் ஒருசிலரே. இந்த வகையில் கலை இலக்கியங்களைப் படைத்துக் கொண்டு தமிழீழ தாயகவிடுதலையையும் நேசித்து அதற்காகவும் அரும்பணிகள் புரிந்த "கஜன்" என்னும் கந்தையா கஜேந்திரன் புலம்பெயர்ந்து வெளி நாடுகளில் வாழும் தமிழீழ மக்களால் மாத்திர மல்லாமல், உலகில் உள்ள தமிழ் மக்களாலேயே நன்கு அறியப்பட்டவர். உண்மைக்கு ஏது நடுநிலைமை என்று தனது எழுத்து வன்மையால் தமிழ் உலகிற்கு காட்டிய அந்தக்கைகள் அப்பப்போது எரிமலை யாகக் குமுறும்போது வெளிவரும் தீப்பிளம்பு போல் இருக்கும் கவிதை வரிகளில் சில இங்கே பதிவாகியுள்ளன.

வெளியீடு:—
தமிழர் கலை பண்பாட்டுக் கழகம்
22 Rue Perdonnet
75010 Paris.

## என் மக்களை வாழவிடுங்கள்




ஈழத்தமிழ் மக்களின் நீண்ட கால விடுதலைப் பயணத்தில் ஒரு தமிழ் மகனாகவும் கிறிஸ்தவக் குருவாகவும் நடந்துகொள்ளும் அருட்தந்தை எஸ்.ஜே.இமானுவல் தனது மக்களோடு மக்களுக்காக அனுபவித்த துன்பியலினால் எழுந்த பேச்சுக்களின் கூட்டுத் தொகுப்பாக்கி இந் நூலில் வெளியிடப்படுகிறது. இந் நூலில் தமிழீழ விடுதலைப்போராட்டமும் தமிழ் திருச்சபையும், எனது மக்களை அடிமைத்தனத்திலிருந்து சுதந்திர மாகப் போகவிடுங்கள், உண்மை விடுதலையளிக்கும், சமாதானம் வேண்டுமாயின் நீதிக்காக உழைப்போம், தமிழ் மக்களின் மாபெரும் வெளியேற்றமும் சிறீலங்கா அரசின் மனிதஉரிமை மீறல்களும், சமாதானத் திற்காக யாழ்.திருச்சபையின் கோரிக்கை ஆகிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அருட்தந்தையின் நிலைப்பாடு பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெளியீடு:
ஜேர்மனி தமிழ்க் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம்
Schutzen str 87. 49084 Osnabruck. Germany



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழ மக்களின் நெஞ்சங்களில் நிறைந்தவர்



கலையுலகில் பிரவேசித்து மக்களிடம் அன்பையும் ஆதரவையும் பெற்று அரசியலில் நுழைந்தவர்கள் பலர். முன்னால் முதலமைச்சர் எம்.ஜி. இராமசந்திரன் அவர்களின் கலை உலக வாழ்க்கையும் அரசியல் வாழ்க்கையும் மக்களின் வளர்ச்சி கருதியே அமைந்திருந்தமையால் அவரது செல்வாக்கு அவரது இறப்பிற்குப் பின்னரும் மங்காமல் உள்ளது.

தமிழக மக்களால் பெரிதும் மதிக்கப் பட்ட இந்தத் தலைவரை தமிழீழ மக்களும் தமது இதயத்தில் இருத்தி பூஜிக்கின்றனர். சிங்கள இராணுவத்தின் தாக்குதல்களில் இருந்து தப்பித்துக் கொள்ள தமிழீழ மக்கள் தமிழகம் வந்தபோது அன்புடன் அரவ ணைத்து ஆதரவு தந்தவர். ஏழைகளிற்கு உதவுவது பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவு வது யாவும் திரைப்படத்துடன் நின்றுவிட வில்லை. தனது நிஜவாழ்க்கையிலும் செய்து காட்டியவர் தான் எம்.ஜி.ஆர் அவர்கள்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் பல இன்னல்களை எல்லாம் சந்தித்த போது உறுதுணையாக நின்றவர். ஆயுதப்போராட் டத்தின் தேவையை உணர்ந்து கொண்ட எம்.ஜி.ஆர் தமிழீழ விடுதலையின் ஆயுதப் போராட்டத்தின் தந்தையான தேசியத்தலை வர் திரு.வே பிரபாகரன் அவர்களை மனதார நேசித்து தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பெருமளவு நிதியை வாரி வழங்கினார். போராட்டத்திற்கு தனது வாழ் நாளின் இறுதிவரை உதவி செய்த அந்த வள்ளலை தமிழீழ மக்கள் என்றுமே மறக்கமாட்டார்கள். தமிழகத்தின் அரசுத் தலைவராக இருந்தும் தமிழீழ விடுதலைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# எம்.ஜி.ஆர்

போராட்டத்திற்கு உதவி செய்ய என்றும் பின்னின்ற தில்லை. இந்திய மத்திய அரசு எத்தனையோ தடைகளைப் போட்டும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் தமிழீழ விடுதலைப்புலிகளை யும் ஆதரிப்பதை அவர் என்றுமே நிறுத்தவில்லை. தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு தந்த தமிழகத் தலைவர்களில் எம்.ஜி.ஆர் அவர்கள் தமிழீழ மக்களின் நெஞ்சங்களில் தனியான இடத் தைப் பிடித்துக்கொண்டார்.

எம்.ஜி.ஆர் அவர்களின் 10ஆம் ஆண்டு நினைவு வணக்க நிகழ்வுகள் 1997 டிசம்பரில் தமிழீழத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் இடம்பெற்றன.

—நிலா—








தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாரத ரத்னா விருது பெற்ற எம். எஸ் சுப்புலக்ஷ்மி

# புதிய ஆண்டின் சிறப்பு விருது

இசை உலகில் புகழ் பெற்ற எம்.எஸ்.சுப்புலக்ஷ்மிக்கு பாரத ரத்னா விருதளித்ததில் பாரதமே பெருமை பெற்று நிற்கிறது. இசை உலகத்தைச் சேந்தவர்கள், உறவினர்கள் நண்பர்கள், அரசியல்வாதிகள் அனைவரும் தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு வாழ்த்துக்கும் அகமும் முகமும் நெகிழ்ந்து கண்ணில் நீர் திரையிடுகிறது. "பெரிய கௌவரம்தான் இது. ஆனா அவர் இல்லையே என்கிற குறைதான் இப்ப எனக்குப் பெரிசா இருக்கு" என்கிறார் எம்.எஸ் அவர்கள். இரண்டுமாதம் தாமதமாகக் கிடைத்த பெருமையினால் தோன்றும் குறை. "குறை ஒன்றுமில்லை மறை மூர்த்தி கண்ணா, குறையொன்றுமில்லை கோவிந்தா" என்று ஆனந்தித்த மனசு அது. 56 வருஷங்கள் தோழனாக, ஆசானாக

www.tamilarangam.net

வழிகாட்டியாக மாணிக்கத்தைக் கட்டிக்காக்கும் ராஜநாயகம் போல் இருந்த கணவர் டி.சதாசிவம் மறைந்த துக்கம் இன்னும் ஏற்றுக்கொள்ள முடியாத ரணமாக வலிக்கிறது என்கிறார். இந்த மகத்தான விருதை தனக்குக் கிடைத்த பெருமையாக மட்டும் ஏற்றுக் கொள்ள மறுக்கிறது மனசு. இரண்டு மாதங்களாகத் தோன்றாத அளவு தனிமை இப்போது என்னை வாட்டுகிறது. "நா பாடணும் என்று ஆசைப்பட்டதே அவர்தான்". இந்த விருது கிடைத்தது கர்நாடக இசைக்கு கிடைத்த கௌரவம்.

எம். எஸ் அவர்களுக்கு கிடைத்த விருதுகள் கணக்கிடமுடியாதவை. 1954–ல் பத்ம பூசன், 74–ல் மகேஸேஸே விருது, 75–ல் பத்ம விபூஷண், 89–ல் ஸ்பிரிட் ஆஃப்ஃபீரீட்ம் விருது, 90–ல் இந்திரா தேசிய ஒருமைப்பாட்டு விருது. மாநில அளவில் கிடைக்காத விருதுகள் இல்லை.ராஜாக்களும் தேசத்தலைவர்களும் அவரது சங்கீதத்துக்கு முன் மண்டியிட்டார்கள். மகாத்மா காந்தி அவரது ரசிகர். எம்.எஸ் அவர்களின் பாட்டைக் கேட்டு, "இந்த இசை ராணியின் முன் நான் யார்? நான் வெறும் பிரதமர்" என்றார் ஜவஹர்லால் நேரு.

மதுரை சங்கீத உலகத்தில் பிரபலமான வீணை கலைஞர் சண்முக வடிவுக்கு 1916 செப் 16ந் திகதி மகளாகப் பிறந்ததும் சங்கீதம் மட்டுமே ஆஸ்தியாகக் கொண்ட சூழலில் வளர்ந்ததும் பலமான அஸ்திவாரங்கள் என்று சொல்லலாம். வீட்டில் தம்புரா ஒலி நின்ற நேரமே இல்லை. தனது 12–வது வயதில் மேடையேறிப் பாடியதுமே இசைவானில் ஒரு நட்சத்திரம் உதயமானதை இசை உலகம் இனம் கண்டது. பெண் பாடகிகளே இல்லாத அந்தக் கால கட்டத்தில், 18 வயது சுப்பு லக்ஷ்மி சென்னை மியூசிக் அக்கடமியில் பாடி சரித்திரம் படைத்தார்.



சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த காந்தியவாதியான சதாசிவத்திற்கு மனைவியானார். அவர் ஒரு நல்ல சங்கீத ரசிகர். அதனால் எம். எஸ் அவர்களுக்கு நல்ல ஒத்துழைப்பு கொடுத்தார். அத்துடன் அவரின் அனுமதியுடன் சாவித்திரி படத்தில் நாரதராக நடித்தார். அந்தப் படத்தால் கிடைத்த பணம் கல்கி பத்திரிகை ஆரம்பிக்க உதவியது. பிறகு கணவர் இயக்கிய மீரா படமும் அதன் ஹிந்தி வடிவமும் தேசிய அங்கீகாரம் கொடுத்தது.



81 வயதிலும் குரலில் இருக்கும் இனிமையும் இளமையும் நம்பமுடியாதது. "இந்த வயசிலேயும் குரல் வளம் குறையாமல் நன்றாகப் பாடுகின்ற கர்நாடக சங்கீத வித்வான் சுப்புலக்ஷ்மி மட்டும் தான்" சங்கீதத்தில் கிடைத்த வருமானத்தை எல்லாம் தர்மத்துக்குக் கொடுத்துவிட வேண்டும் என்ற எண்ணமும் சதாசிவத்துடையது. அதுவே எம்.எஸ் இன் கொள்கையாயிற்று எம்.எஸ்ஸுக்கு ஏழை எளியவர்களிடம் இருந்த காருண்யமே தர்மத்தின் உந்துதல். 50 ஆண்டு சுதந்திரத்திற்குப் பின்னும் தேசத்தில் தென்படும் ஏழ்மை மிகவும் வருத்துகிறது என்கிறார். யார் வந்து கேட்டாலும் கையிலே இருக்கிறதை கொடுத்துவிடுவார். அவரது முக அழகைப் போல, எதிலும் சுத்தம், நேர்த்தி. அவரது அழகுணர்ச்சி, பேசும் நாகரீகம், வாழ்வின் எளிமை எளிமையில் வள்ளல் குணம், இதனாலேயே அவரது ஆன்மீக சொத்து உலகளாவியது. கணவன் மனைவியாக அவர்கள் ஏற்படுத்திக் கொண்ட ஒரு அபூர்வ பிணைப்பால் விளைந்த சொத்து. எம். எஸ் ஸின் சங்கீதத்தைப் போலவே அவரது வாழ்வும், உறவுகளும் பிணைப்பும் அசாதாரணமானது.

பாராட்டு குவியும் இந்த நேரத்தில் "அவர் இல்லையேன்னு குறையாயிருக்கு" என்கிறார். கணவர் மறைந்த பிறகு தம்புராவை மீட்டிப் பார்க்கவில்லை. "பாடத் தோணலை" என்கிறார்.

பாட வேண்டும். அதுவே அவரது மூச்சு. இசை வாணியின் குரலை கேட்க உலகம் காத்திருக்கிறது.

—பைரவி

www.tamilarangam.net



# மார்க்ஸின் கல்லறை

சில கல்லறைகள் வரலாற்றையும் மீறி என்றும் உயிர்ப்புடன் இருக்கின்றன. கார்ல் மார்க்ஸின் கல்லறை லண்டன் ஹைகேட் (High gate) பகுதியில் அமைந்திருக்கிறது. கார்ல் மார்க்ஸ் 1818 ஆம் ஆண்டு ஜெர்மனியில் டிரையர் என்னும் இடத்தில் பிறந்தார். இவர் 1849—ஆம் ஆண்டிலிருந்து 1883 வரை பிரிட்டனில் வாழ்ந்தார். 1849—லிருந்து 1856 வரை ஏழு ஆண்டுகள் லண்டன் நகரில் வாழ்ந்த மார்க்ஸ் 1856 முதல் இறக்கும் வரையிலான 27 ஆண்டுகள் கென்டிஸ் ரவுண் (Kentish Town) பகுதியில் வாழ்ந்தார். அங்குதான் அவர் மரணமுற்றார். அவர் வாழ்ந்த இடத்துக்கு மிக அருகில் ஹைகேட் கல்லறை இருந்ததால் அவரது குடும்பத்தினரால் அங்கு புதைக்கப்பட்டார்.

பிரிட்டனில்தான் அவரது மூலதனம் நூல் எழுதப்பட்டது. 1860 ஆம் ஆண்டுமுதல் 1867—வரை ஏழு ஆண்டுகள் அதற்காக மார்க்ஸ் செலவிட்டார். மிகுந்த வறுமையில் வாடிய மார்க்ஸுக்கு அவரது நண்பரான பிறெடறிக் எங்கெல்ஸ் வாழ்நாள் முழுவதும் பொருளாதார பாதுகாப்பு வழங்கினார். இருவரும் உயிர் நண்பர்களாகத் திகழ்ந்தனர்.



புகைப்படம்— சாந்திகுணம்

கார்ல் மார்க்ஸ் இறந்து ஏறக்குறைய அறுபது ஆண்டுகளின் பின் 1955—ஆம் ஆண்டு பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சி இப்போதிருக்கும் வடிவிலான மார்க்ஸின் கல்லறை அமைப்பதற்கான ஒரு குழுவை அமைத்தது. 1956—ஆம் ஆண்டு கார்ல் மார்க்ஸ் குடும்பத்தவர் அனைவரதும் கல்லறைகள் இடம் மாற்றப்பட்டு ஒரே இடத்தில் புதைக்கப்பட்டார்கள். சிற்பி லாரண்ஸ் பிராட்ஸா மார்க்ஸின் மார்புச் சிலையை வடிவமைத்தார். கிரானைட் கல்லாலான திண்மையான அறுப்பாகத்தின் மீது மார்க்ஸின் முகம் தாமிர உலோகத்தில் எழுந்து நிற்கிறது. மிகவும் எளிமையானதும் கம்பீரமானதுமான கல்லறை அது. எப்போதும் அந்த பீடத்தின் மீது அன்றலர்ந்த ரோஜா மலர்க்கொத்துக்களைப் பார்க்கலாம்.

1884—ஆம் ஆண்டு மார்ச் 16 ஆம் நாள் மார்க்ஸின் நினைவு நாளை நினைவு கூறி மார்க்ஸ் கல்லறை நோக்கி ஆயிரம் மக்கள் பதாகைகளுடனும் வாத்தியங்களுடனும் அணிவகுத்துச் சென்றார்கள். ஐநூறு பொலீஸ்காரர்கள் குவிக்கப்பட்டார்கள். ஊர்வலம் கல்லறைக்குள் நுழைவது தடை செய்யப்பட்டது. மார்க்ஸின் மூத்தமகள் அஞ்சலி செய்வதற்கு மலர்க்கொத்து வைப்பதற்குக்கூட அனுமதி மறுக்கப்பட்டார்.

இன்றைய நாள் வரை திரும்பத் திரும்ப அவரது கல்லறையின் காலச்சுவடுகளில் மலர்கள் வைக்கப்பட்டுக்கொண்டுதான் இருக்கிறது. கைகள் மாறியிருக்கின்றபடி இனங்கள் மாறியிருக்கின்றது. நிறங்கள் மாறியிருக்கின்றது. ஆனால் அந்தப் புரட்சிகர நம்பிக்கை கைகளிலிருந்து கைகளுக்கு இரயில்களிலிருந்து இரயில்களுக்கு கண்டங்கள் தாண்டி எடுத்துச் செல்லப்பட்டன. உலகெங்குமுள்ள ஆலைகளில், பல்கலைக்கழகங்களில், வயல்வெளிகளில் மறுபடி மறுபடி விதைக்கப்பட்டபடிதான் இருக்கிறது.

**-ஜமுனா ராஜேந்திரன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





**HOT SPRING ஆங்கில மாத சஞ்சிகையின் பொறுப்பாளரும் ஆசிரியருமான திரு.எஸ். சிவநாயகம் அவர்களை பாலம் சஞ்சிகை சார்பாக பாரிஸில் சந்தித்த போது.......**

# கேட்டோம் சொன்னார்கள்

**அதிகமான மக்களால் அறியப்பட்டவரும், பத்திரிகைத் துறையில் நீண்டகால அனுபவமுள்ளவருமான நீங்கள் கடந்தகாலங்களில் பத்திரிகைத் துறையில் எவ்வாறான அனுபவங்களைச் சந்தித்திருந்தீர்கள்?**

நான் ஏறத்தாழ 45 வருடங்கள் இந்தப் பத்திரிகை எழுத்துத் துறையில் கடமையாற்றி வருகிறேன்.

இலங்கையில்....

இதில் 30 வருடமாக கொழும்பில்பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டேன். 1950–ம் ஆண்டுகளில் இன்று இருந்தது போல பல ஆங்கிலப் பத்திரிகைகள் இருக்கவில்லை. ஆக இரண்டு ஆங்கிலப் பத்திரிகைகள் தான் இருந்தன. அதில் Daily News பத்திரிகைக்கு இலங்கை அரசியலில் பெரும் பங்கு இருந்தது. 1953–ம் ஆண்டு முதன் முதலில் Daily News பத்திரிகையில் வேலை செய்தேன்.

Daily Mirror பத்திரிகை 60–ம் ஆண்டுகளில் வெளிவர ஆரம்பித்தது. அங்கு 10 வருடங்களாக



சிரேஷ்ட உதவி ஆசிரியராக கடமையாற்றினேன். பின்னர் உல்லாசப் பயணச் சபையில் பத்திரிகை, சஞ்சிகை வெளியிடும் பிரிவில் ஆசிரியராக கடமையாற்றியபோது அதிக பொறுப்புகள் இருந்தது. உல்லாசப் பயணிகளைக் கவருவதற்கான சஞ்சிகைகள், கையேடுகளை தயாரிக்கும் பொறுப்பு

**அந்தக் காலங்களில் கணனி வசதிகள் இருக்கவில்லை. அப்படியிருந்தும் பகல் இரவாக வேலை செய்து ஒரு நாளிற்கு 4.5 பதிப்புகளை வெளிக் கொண்டு வந்தோம். அப்படி வேலை செய்யும் போது எமக்கு அதிகம் சிரமமாக இருக்கும். ஆனாலும் அதில் ஒரு சந்தோஷம் இருந்தது. பத்திரிகையை செய்துமுடித்து விட்டு அடுத்த நாள் பத்திரிகையைப் பார்க்கும் போது நாம் விட்டபிழைகளை உணரக்கூடியதாக இருக்கும். அதே வேளை பத்திரிகையை அச்சிற்குப் பின் பார்க்கும் போது, மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும். எமது எழுத்துக் களை எத்தனையோ ஆயிரம் மக்கள் வாசிக்கப் போகிறார்களே என்று நினைக்கும் போதே அது ஒரு தனி இன்பம்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருந்தது. அந்தக் காலகட்டத்தில் இலங்கையின் வரலாற்றைப்பற்றிக் கூறவேண்டியிருந்தது. அவ்விடத்தில் 16–ம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் தமிழ் இராச்சியம் இருந்ததாகக் குறிப்பிட வேண்டும். அது வரலாற்று உண்மையும்கூட. அப்போது அக்காலகட்டத்தில் மந்திரியாக இருந்த சிறில்மத்தியூவிடம் ஒரு சிலர் நான் தமிழர் பற்றிய பிரச்சாரம் செய்வதாக கூறியிருந்தனர். இதனால் சில பிரச்சினைகளைச் சந்தித்தேன். அதனால் அந்தப் பதவியிலிருந்து ராஜினாமா செய்யவேண்டி வந்தது. இவை யாவும் வித்தியாசமான அனுபவம். வித்தியாசமான காலம்.

**பதவியை ராஜினாமா செய்த பின் மீண்டும் பத்திரிகைத் துறையில் எவ்வாறு காலடி எடுத்து வைத்தீர்கள்?**

*1982*–இல் கொழும்பை விட்டு வெளியேறி யாழ்ப்பாணம் சென்று Saturday Review பத்திரிகையை ஆரம்பித்தோம். Saturday Review வாரப்பத்திரிகை ஆரம்பித்த காலத்தில் எனக்கு முழுப் பொறுப்பும் இருந்தது. அந்தக் காலத்தில் கையால் அச்சுக் கோர்த்து செய்தாலும் ஒழுங்காக பத்திரிகையை வெளிக்கொண்டு வர முடிந்தது.

இந்தியாவில்....

*1983* செப்டம்பரில் இந்தியா சென்றேன். 1983 ஒக்டோபர் மாதத்திலிருந்து *1987* வரை தமிழர் தகவல் நிலையத்திற்கு பொறுப்பாக இருந்தேன். அதன் பின் லண்டனிலிருந்து வெளிவரும் Tamil Times இற்கு எழுதிக் கொண்டிருந்தேன். Tamil Times இன் போக்கு தமிழருக்கு ஒத்துவராததாக இருந்தது. எனக்கும் அவர்களது அரசியல் போக்கில் நம்பிக்கை இருக்கவில்லை. பின்பு லண்டனிலிருந்து வெளிவரும் Tamil Voice International ற்கு எழுதிக் கொண்டிருந்தேன். இதே நேரத்தில் லண்டனில் Tamil Nation பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. அதன் பொறுப்பை *1990*–ம் ஆண்டு ஏற்றுக்கொண்டேன். இந்தியாவில் Tamil Nation பத்திரிகையை அச்சுத் துறையில் வித்தியாசமான முறையில் கொண்டு வந்தோம். முதலில் அச்சடித்து பின்னர் அதை ஒட்டி வடிவமைத்துவிட்டு அதைப் படமாக்கி அச்சுப்பதித்திருந்தோம்.

*1991* இல் அந்த பத்திரிகை தொடர்பாக எனக்குப் பிரச்சினை வந்தது. ராஜீவ் காந்தி கொலை



செய்யப்பட்டு இரண்டு மாதங்களுக்குப் பின்பே எனக்குப் பிரச்சினை ஆரம்பமாகியது.

அதனால் இந்தியப் பாதுகாப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டேன். சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டதும் இந்தியாவில் தொடர்ந்து இருப்பது சாத்தியமல்ல என்று உணர்ந்ததால் ஐரோப்பாவிற்கு வந்துசேர்ந்தேன்.

ஐரோப்பாவில்....

தற்போது HOT SPRING என்ற ஆங்கில சஞ்சிகையை வெளிக்கொண்டு வருகிறேன். HOT SPRING சஞ்சிகையை முற்று முழுதாக கணனியிலேயே வடிவமைக்கிறோம். ஈழத்தமிழர்களிடம் இருந்து வெளிவரும் ஒரே ஒரு ஆங்கில சஞ்சிகையாக HOT SPRING இருந்தும் அதை மிகவும் கஷ்டங்களின் மத்தியிலேயே வெளிக் கொண்டுவர வேண்டியுள்ளது.

இன்னொரு விடயம் என்னவென்றால் எமது தமிழ் சமுதாயம் அதாவது பெற்றோர்கள் தமது பிள்ளைகளை மருத்துவராகவோ பொறியியலாளராகவோ, கணக்காளராகவோ வரவேண்டும் என்றே விரும்புகின்றனர். இது தவறான ஒரு முடிவாகும் பத்திரிகைத் தொழிலை எடுத்துக் கொண்டால் அதற்கு ஓய்வூதியம் இல்லை. பாதுகாப்பில்லை. பெரும்பாலானோர் இதற்குள் வருவதில்லை. ஏன் பத்திரிகைத் தொழில் என்றால் பெண் எடுப்பதே பெரும் பிரச்சினையாக இருந்தது.

ஆனால் தற்போதைய தமிழ் மக்களின் நிலையில் ஆங்கிலத்தில் ஒரு சஞ்சிகை வெளிவருவது அத்தியாவசியமாக உள்ளது. பொறியியல், மருத்துவம் போன்ற துறைகளில் பல தமிழர்கள் உள்ளார்கள். ஆனால் ஆங்கில பத்திரிகைத் துறையில் தமிழ் மக்களின் தற்போதைய தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியவாறு தகுதியும் உணர்வுமுள்ள தமிழர்கள் இல்லை என்பது மிகவும் மனவருத்தப்பட வேண்டிய ஒரு விடயம்.

இதே நேரத்தில் இன்னொரு விடயத்தையும் சொல்ல வேண்டும் என நினைக்கிறேன். தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் தமிழன் என்ற முறையில் நானும் எனது பங்களிப்பைச் செய்யவேண்டும் என்ற வகையில் கடந்த *15* வருடங்களாக என்னாலான பங்களிப்பைச் செய்து வருகிறேன்.

**பத்திரிகைத் துறைக்கு வருவதற்கு முன்னர் உங்களது இளமைக்கால வாழ்க்கை அனுபவங்கள் எப்படி இருந்தது?**

நான் பிறந்து வளர்ந்தது யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கொக்குவில் என்ற இடத்தில். நான் ஆரம்பத்தில் படித்தது கொக்குவில் இந்துக் கல்லூரியில். பின்னர் யாழ்ப்பாணக் கல்லூரியில் படித்தேன். சிறுவயதில் நிறைய குறும்புகள் செய்துள்ளேன். கொக்குவிலில் *18* வருடங்கள் வாழ்ந்தேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**1983-ஜூலை இனக்கலவரத்தைத் தொடர்ந்து சென்னை சென்ற திரு சிவநாயகம் அவர்கள் தமிழர்களின் போராட்டம் பற்றிய பிரச்சாரத்திற்கு நல்ல முறையில் திட்டமிட்டு செயற் பட்டார். சென்னையிலும் பல்வேறு பிரசுரங்களையும், நூல்க ளையும் வெளியிட்டு வந்தார்.**

**1986-ல் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு மாநாடு மதுரையில் நடைபெற்றபோது சிறப்புப் பார்வையாளராக கலந்துகொள்ளும் படி கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் கடிதம் மூலம் கேட் டுக் கொண்டார்.**

**1991-ல் தனது 61-வது வயதில் இந்தியப் பாதுகாப்பு அதிகா ரிகள் இவரைக் கைதுசெய்து சிறையில் இட்டனர். நீதிமன்றத் திற்கு விசாரணைக்கு கொண்டுசெல்லப்படும் வேளையில் கூட கையில் விலங்குகள் மாட்டப்பட்டே அழைத்துச் செல்லப் பட்டார். ராஜீவ் காந்தியின் மரணத்திற்குப் பின்னர் இலங்கைத் தமிழர் மீது இந்திய அரசு காட்டும் மனப்பான்மைக்கு பலி யானவர்களில் இந்தத் துணிச்சல் மிக்க பத்திரிகையாளரும் ஒருவர்.**

எனது குடும்பம் ஓரளவு வசதி யானதாக இருந்தபடியால் எனக்கு கஷ்டங்கள் என்பது தெரியவில்லை. பின்னர் யாழ்ப்பாணக் கல்லூரி யில் சேர்ந்து அங்கு விடுதியில் தங்கியிருந்து கல்வியைத் தொடர்ந் தேன். அங்கு படிக்கும் போது தான் ஒரு பெண்ணை காதலித் தேன். ஆனால் திருமணம் முடித் தது 1963–ம் ஆண்டு. ஆனால் 52,53–ம் ஆண்டுகளில் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்து விட்டோம். ஆனால் எனக்கும் ஒரு மூத்த சகோதரி, எனது மனை விக்கும் ஓர் மூத்த சகோதரி இருந்த படியால் அவர்களுக்காக நாங்கள் 12 ஆண்டுகள் காத்திருந்து மண முடித்தோம். எனக்கு இரண்டு பெண் பிள்ளைகள் இருக்கிறார்கள்.

**உங்கள் பொது வாழ்க்கை எப்படி அமைந்திருந்தது?**

நான் எப்போது பொது வாழ்க்கையில் ஈடுபட்டேனோ அப்போதிருந்தே கஷ்டங்களும் பிரச்சினைகளும் என்னுடன் சேர்ந்து கொண்டன. என்ன கஷ் டம் வந்தாலும் ஒரு நோக்கத்திற் காகச் செய்கிறோம் என்ற கார ணத்தினால் கஷ்டங்களை, பிரச்சி னைகளை சுலபமாக வெற்றி கொண்டேன். மனதிற்கும் ஒரு திருப்தி இருந்தது.

**பாலம் சஞ்சிகை எவ் வாறு வெளிக்கொண்டு வரப்படவேண்டும் என்று நினைக்கிறீர்கள்?**

எமது மக்களின் மனங்களை வெல்லக்கூடியவாறான விடயங் களைத் தாங்கிவரவேண்டும். நீண்ட கட்டுரைகள், கதைகள் இருந்தால் சிறப்பாக இருக்காது. சிறிய சிறிய விடயங்களாக எமது மக்களிற்குத் தேவையான விதத் தில் விடயங்கள் கொடுக்கப்பட வேண்டும். ஒரு பத்திரிகையையோ, சஞ்சிகையையோ வெளிக்கொண்டு வருவது என்பது மிகவும் கஷ்ட மான விடயம். முயற்சி இருந்தால் தான் எதையும் சாதிக்கலாம். எமது மக்களிடையே எழுத்தாற் றல் நிறைய உள்ளது. அதை வெளிக்கொண்டுவருவதற்கு பாலம் சஞ்சிகை கடும் முயற்சி எடுக்க வேண்டும். இதன் மூலம் பாலம் சஞ்சிகையினூடாக பல விடயங்களை எமது மக்களிற்குக் கூறலாம்.

★★★

# சோகம்

சூரிய வெளிச்சம்
அன்று போலவே
இளம் சிவப்பாய்க்
கிடந்தது.

புல்லும்
பூவோடு நிலமும் பார்த்து
சிறு சுழிக்காற்றும் குத்தும்.

சிவப்புக் காலைக்கு
அழகும் மணமும் வேறு.

மலைப் படிக்கட்டில்
ஓங்கியோங்கி நடக்க
முகில் வந்து சேரும்.
சிவப்புக் கதிரவனை மூட
மழை அழும்.
அருவிகூட ஓலமிடும்.

இங்கும் சில படிகள்
தேடி வருகின்ற முகில்கள்
பனிக் கட்டிகள்
மலைகளாய்க் குவியும்
ஆனாலும் அந்த இளம்
சிவப்பு
ஆனந்தம் குன்றி
வாசமிழந்து வருகிறது.
ஏன் இந்த
இளங்காலைகூட
இப்படியே சோகமாய்.....?

–சன்னதமாடி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சம்பா ரவைச் சக்கரைப் பொங்கல்

| | |
|---|---|
| சம்பா ரவை | – 200 கிராம் |
| பச்சைப்பருப்பு | – 60 கிராம் |
| சக்கரை | – 250 கிராம் |
| நெய் அல்லது வனஸ்பதி | – 4 மேசைக்கரண்டி |
| முந்திரிப் பருப்பு | – 4 |
| ஏலக்காய் | – 1 |
| உப்பு | – ஒரு சிட்டிகை |

வறுத்த பச்சைப் பருப்பையும், சம்பா ரவையையும்1/2 லீடட்ர் தண்ணீரில் உப்புக் கலந்து வேக வைக்கவும்.

வெல்லத்தைச் சிறிது தண்ணீரில் கரைத்து, அடுப்பில் வைக்கவும். ஒரு கொதி வந்தவுடன் வெந்த ரவை, பருப்புக் கலவையைச் சேர்த்து நன்றாகக் கிளறவும். பிறகு நெய் அல்லது வனஸ்பதி, வறுத்த முந்திரி, பொடித்த ஏலக்காய் சேர்த்து இறக்கவும். சூடாகப் பரிமாறவும்.

அளவு: 4 நபர்களுக்கு.
ஓர் அளவின் கலோரிச் சத்து: 600.

## சமைப்போம் சுவைப்போம்

# கோதுமை தக்காளிச் சாதம்

| | |
|---|---|
| சம்பா ரவை | – 200 கிராம் |
| வெங்காயம் | – 100 ” |
| தக்காளி | – 250 கிராம் |
| பச்சை மிளகாய் | – 2 |
| கறிவேப்பிலை | – சில |
| மஞ்சள்பொடி | – ஒரு சிட்டிகை |
| மிளகாய்ப்பொடி | – 1 தேக்கரண்டி |
| எண்ணெய் | – 75 மி.லீ. |
| கடுகு | – 1/2 தே.க |
| தண்ணீர் | – 500 மி.லீ. |
| உப்பு | – 1 1/2 தே.க. |

சம்பா ரவையை 1 தே.க. எண்ணெயில் சிவக்க வறுத்து500 மி..லீ. தண்ணீரில் வேக வைக்கவும். எண்ணெயைக் காய வைத்துக் கடுகு பொரிந்தது, நறுக்கிய வெங்காயம், அரிந்த மிளகாய் ஆகியவற்றை வதக்கவும். வெங்காயம் பொன்னிறமாய் ஆனவுடன், பொடியாய் நறுக்கிய தக்காளியைச் சேர்த்து, நன்றாக வதக்கவும். மஞ்சள் பொடி, மிளகாய்ப் பொடி, உப்பு, கறிவேப்பிலை முதலியவற்றைச் சேர்த்துத் தண்ணீர் வற்றும் வரை வதக்கவும். பின்னர் வேக வைத்த சம்பா ரவையைத் தக்காளிக் கலவையுடன் சேர்த்து நன்றாகக் கிளறவும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# எசியன் என்ரபிறைஸ்



பட்டு வேஷ்டி, நாலுமுழ வேஷ்டி, மாறுகரை வேஷ்டி, கிப்ஸ் சாறம், பெண்களுக்கான அலங்காரப் பொருட்கள், திருமணத்திற்கான அனைத்துப் பொருட்களும் கூறைச்சேலை, பாவாடை, சட்டை, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட எல்லா நிறங்களிலுமான சட்டைத் துணிகள் ஆகியவற்றிற்கு சுவிஸில் நம்பிக்கையான ஸ்தாபனம் ஏசியன் என்ரபிறைஸ்.

**தங்க நகைகளுக்கு உத்தரவாதமும் பற்றுச் சீட்டும் வழங்கப்படும்.**

# *ASIAN ENTERPRISE*

**Hohl .str 78. 8004 Zurich. Swiss.**
**Tel: 01 291 4652**
**Fax: 01 291 4637**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நல்ல பெடியன்

## சிறுகதை

கி.செ.துரை

ஏழு மணிக்கே இருட்டு ஆரம்பமாகி, பழுத்தும்விட்டது. மூட்டமாக இறங்கிய சன வெக்கை கலை விழாவிற்கு வந்திருந்தவர்களைக் களைபோட வைத்திருந்தது. இருப்பதற்கு விருப் பமில்லாமலே இருப்பவர்கள் போல நிறையப் பேர் கதிரைகளில் வழிந்து கிடந்தனர்.

"எனக்கு ஒரு கப் கோப்பி வேண்டும்!''

"சீனி போட்டா? போடாமலா?

"பால் விட்டு''

அந்த டெனிஸ்காரன் திருவாசகத்தை முதல் தடவையாக நிமிர்ந்து பார்த்தான். பின் கோப்பியை வார்த்துவிட்டு, பால்ப்பெட்டியையும் தூக்கி முன்னால் வைத்தான்.

பணத்தைக் கொடுக்க, அருகில் சென்றபோதுதான் அவனுடைய காதுகளைப் பார்க்க முடிந்தது. மரம் அரியும் இயந்திரங்களுக்கு அருகில் நிற்போர் பாவிக் கும் கிடைச்சிகளால் காதுகளை அடைத்திருந்தான்.

மேடையில், "தும்! தும்!'' என்று குத்தும் ஒலியு டன் அடுத்த சினிமாப்பாடல் ஆரம்பமாகியிருந்தது. வாத்தியங்களின் அதைப்பு, சுற்றிவர கைகளை நீட்டும் மிகை யொலி அலைகளோடு காதுக் கிடைச்சிக ளையும் தொடர்பு படுத்திப் பார்த்தார். தன்னுடைய செவிப் புலன்களிலேயே சந்தேகம் வர காதை மெதுவாகக் குடைந்து கொண்டார்.

எதிலுமே எந்தவித இலயிப்பு மின்றிக் கோப்பியை மிடறுவதும், பார் வையை அங்கும் இங்கும் வீசுவதுமாக யாரையோ தேடினார். அவர் தேடி வந்த சிறிஸ் இதுவரை அகப் பட்ட பாடாயில்லை. பெடியனைப்பற்றிச் சேகரித்த தகவல்கள் அவனைப் பார்க்க வேண்டுமென்ற துடிப்பை மேலும்மேலும் அதிகரித்தன.

வயது இருபத்தேழு, குடி, கட்டை, கூத்தியா தொன்றுமில்லை. ஒரே மர பக்டறியில் தொடர்ந்து ஏழு வருடங்களாக வேலை செய்து வருகிறான். தானுண்டு தன்பாடுண்டு என்று வாழ்பவன். அவ னுடைய பொழுது போக்கு தொலைக் காட்சியில் யூரோ ஸ்போட்ஸ் பார்ப்பது. நேரம் கிடைத்தால் கலை விழாக்களுக்கும் வருவதுண்டு.

முன்புறமாகப் பார்த்தார். சில பெடியன்கள் வீடியோ எடுப்பவரின் பார்வைக்காக இருக்கும் தொலைக்காட்சிப் பெட்டியை மொய்த்திருந்தனர். கலைவிழாவை நேரடியாகப் பார்க்க வழியிருக்க இவர்கள் எதற்காக ரீ.வியைப் பார்க்கிறார்கள் என்று யோசித்தார். ஒருவேளை சிறீஸ் அவர்களுடன் இருக் கலாமென்று நினைத்துக் கொண்டே அருகில் போனார் அங்கும் அவன் இல்லை.

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மூன்று கமேராக்க ளில் ஒன்று பார்வையாளர் பக்கமாகச் சுழன்று கொண்டிருந்தது. யார்யார் வந்திருக்கிறார்கள் என்ப தையும், அவர்களுடைய சோடனைகளையும் பார்க்க வேண்டுமானால் இருக்கவேண்டிய சரியான இடம் அந்தத் தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன்புதான் என்பதை விளங்கிக் கொண்டார். சுற்றியிருந்தவர்க ளின் அறிவை மெச்சியபடி, தானும் அங்கேயே அமர்ந்து கொண் டார். சிறிஸ்சைத் தேட அதை விட்டால் சிறப்பான இடம் கிடைக் கப் போவதில்லை. கடைசியாக வந்த சினிமாவின் பெய ரில் வெளியாகியிருக்கும் உடுப்புக்களும், கொண்டைகளும், சிங்கப்பூரின் கடைசி டிசைன் நகைகளுமாக வந்திருக்கும் பெண்களை யெல்லாம் கமேரா நின்று நின்று அன்போடு குசலம் விசாரித்துச் சென் றது. அதேவேளை அவர்களைக் காமாந்து பண்ணுவ தற்கே வந்திருக்கும் வயோதிபர்களின் முகங்களைப் பார்த்துவிட்டால் கமேராவும் தத்தித் தத்திப் பாயவே செய்தது. கமேரா எப்போதாவது ஆண்கள் பக்கம் செல்லலாம். அப்போது சிறிஸ்சைத் தேட லாம் என்று காத்திருந்தார்.

அவளுடைய மூத்தவள் நளினியும் சிறிஸ்சைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போலத்தான் மிகவும் அமைதியானவள். ஆடி பிறக்க முன்னர் அவளுடைய காரியத்தையும் முடித்துவிட வேண்டும். பிறகு இரண்டாவது மகளின் காரியத்தையும் தொடங்கவேண்டும். சிறிஸ்சின் உழைப்பிருந்தால் அவளுடைய காரியத்தையும் சீக்கிரம் முடித்துவிடலாம். நல்ல வேளை கடைக்குட்டி பெடியனாகப் பிறந்திருந்தான். சிறிஸ்சின வீட்டு முகவரியும், தொலைபேசி இலக்கமும் கையில் இருந்தன. வலியத் தேடிப் போவது மதிப்புக் குறைவென்றபடியால் தற்செயலான சந்திப்பொன்றை விரும்பினார்.

பாயாசத்தில், "நறுக்'' கென்று பயறு கடிபடுவதைப் போல பின்னால் நின்ற சிலர் அடிக்கொரு தடவை கடுமையான தூஷணங்களைத் துப்பிக் கொண்டிருந்தனர். சிலவேளை அவர்கள் மனமுடைந்தவர்களாக இருக்கலாமென்று நினைத்துக் கொண்டார். திடீரெனப் பலமான தூஷண வார்த்தைகள் கேட்டன. வேகமாக ஓடிவந்த ஒருவன் முன்புறமாகப் பாய்ந்து, பியர்ப் போத்தலை நிலத்தில் எறிந்து உடைத்தான். இன்னொருவன் கையில் வைத்திருந்த கம்பால் கதிரையில் ஓங்கி வெழுத்தான். காகக் கூட்டத்தில் கல்லெறி விழுந்தது போல சனம் அல்லோல கல்லோலப்பட்டு எழுந்தது. முன்னால் இருந்த ஒருவன் ரீ.வியைத் தள்ளி விழுத்தினான். அவனுக்கு வீ.டி.ஓக்காரன் மீதிருந்த பழைய வெப்பிரசாதத்தைத் தீர்க்க, இது நல்ல சந்தர்ப்பமாக இருந்திருக்க வேண்டும்.

திருவாசகம் எழும்பி ஓடத்தொடங்கினார். "பொம்பிளைப் பிள்ளையள் கவனம்" என்ற சத்தமே எங்கும் மேலோங்கி நின்றது. தங்கள் தங்கள் குடும்பங்களைப் பாதுகாத்துவிட்ட நின்மதியோடு பலர் கார்களுக்குள் பாய்ந்து ஏறிக்கொண்டனர். சனம் ஓடிய ஓட்டத்தைப் பார்க்க ஜூலைக் கலவரத்தில் "கொட்டியா" வருகிறார்கள் என்ற வதந்தியால் பயந்தோடியோரின் ஓட்டங்களே நினைவுக்குவர திருவாசகம் மேலும் வேகமெடுத்தார். பஸ் தரிப்பிடத்தில் ஒரு பஸ் வந்து கதவைத் திறக்க பாய்ந்து ஏறிக்கொண்டார். அது எங்கே போகிறதென இனித்தான் விசாரிக்க வேண்டும். ஒருமணி நேரப் பயணத்திற்கான ரிக்கற்றைப் பெற்றுக் கொண்டார்.

கெந்திக் கெந்தி நடந்தபடியே இருக்கைகளை நோட்டம்விட்டார். இரண்டொரு இரவுப் பயணிகள் அங்குமிங்குமாக இருந்தனர். பின் பக்கம் ஒரு கறுப்புத் தலை தெரியவே, உரிமையோடு அருகில் போனார். சிறீஸ் வேலைத்தல உடையோடு வீடு திரும்பிக்கொண்டிருப்பது தெரிந்தது. எப்போதுமே முதலில் சோதனையைத் தந்து இறுதியில் இன்பத்தைக் காட்டிவிடும் அளக்கடவை அம்மனின் அருளை மெச்சினார்.

"தம்பி வேலை முடிஞ்சு வாறாப் போலை?"

"ஓம்!" "சனிக்கிழமையும்....."

"ஓடர்ஸ் கொஞ்சம் கூட,

அதுதான் ஓவர்டைம் செய்யிறம். "திருவாசகத்தை சிறிஸ் முன்னரே மலிவு விற்பனை நடக்கும் இடங்களில் அடிக்கடி பார்த்திருக்கிறான். ஆனால் கதைப்பது இது தான் முதல் தடவை.



"நீங்கள் எங்கை போறியள்?"

"வீட்டைதான்!"

"வீடென்றால் நீங்கள் உழுத்தன் போவிலையெல்லவோ இருக்கிறது. இது ரெண்டாம் நம்பர் பஸ்!"

"தம்பிக்கு நான் உழுத்தன் போவிலைதான் இருக்கிறது எப்பிடித் தெரியும்...?

"கன தமிழாக்கள் அங்கைதான் இருக்கினம் அதுதான்....' இனியும் பஸ் மாறி ஏறிய கதையை மறைக்க முடியாதென்பதை அறிந்துகொண்டே, நடந்ததையெல்லாம் விலாவாரியாகக் கூறி முடித்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"விழாவுக்கு எத்தின சனம் மட்டிலை வந்திருக்கும்?"

"இல்லையில்லை எண்டாலும் ஒரு நானூறு உருப்படிக்கு குறையாது."

"போத்தில் எறிஞ்சது எத்தினை பேர்?"

"ஒரு ரெண்டு மூண்டு பேர் இருக்கும். ஐயோ குறுக்காலை போவாரெண்டு ஆரைச் சொல்லுறியள்? ஓட்டமெடுத்த சனத்தையோ? அல்லது போத்தில் எறிஞ்சவங்களையோ?" சிட்டிகை மூக்குப் பொடியை கிள்ளியெடுத்த திருவாசகம் அதை இழுக்க மறந்து, "சரக்! சர்!" என வெறும் மூக்கை இழுத்து சளியை மேலே ஏற்றிக்கொண்டார்.

"மூன்றுபேர் போத்திலெறிய, நானூறு சனம் விழுந்தடிச்சு ஓடியிருக்கென்டா அதுகளின்ரை புத்தி குறுக்காலைதானே போயிருக்க வேணும். எல்லாரும் ஒண்டாச் சேர்ந்தால் மூண்டுபேரை மடக்கிப் பிடிக்கிறது பெரிய வேலையே?" சிறிஸ் சுட்டிக் காட்டிய போதுதான் பயந்தோடிய "குறுக்காலை போவார்" பட்டியலில் தானும் அடங்கிப் போவதை அறிந்து வெட்கினார்.

இருந்தாலும் சிறிஸ் விவரமான பெடியன் என்பதை அவரால் மறுக்க முடியவில்லை. அவர் எதிர் பார்த்ததைப் போல அவன் ஓர் மானஸ்தனாகவும் இருக்கவேண்டும் என்றே எண்ணினார். தான் தேடித்திரிந்த பெடியன் இவனேயல்லாது வேறொருவனல்ல என்றும் மெய் சிலிர்த்தார். மூத்த மகள் நளினியின் கல்யாணம் கண்களுக்குள் ஓடியது.

"உம்மைப் போல நாலு விஷயம் தெரிஞ்ச பெடியள் இப்ப எங்கை கிடைக்குதுகள்? ஒரு நல்ல மாப்பிள்ளையைத் தேடுறதென்டால் உமியிலை நெல்லுப் பொறுக்கின கதையாத்தான் கிடக்கு". சிறிஸ் அமைதியாக இருந்தான் அவன் முகத்தைப் பார்த்த பின் திருவாசகம் சிறிது உற்சாகமடைந்தார்.

"தம்பி! வெளிநாடு வந்த பிள்ளை குட்டியெல்லாம் ஏன் உப்பிடி நாசமாப்போகுதுகள் சொல்லும்பாப்பம்?" அவன் இதற்கும் பதில் சொல்லாததால் திருவாசகமே தொடர்ந்தார்.

" நாட்டிலை இருக்கிற சொந்த பந்தங்களை ஐயோ எண்டு தவிக்க விட்டிட்டு இஞ்ச ஓடிவந்தம்! ஆமிக்காம்புகளிலையும், பொலிசிலையும் பிள்ளை குட்டியளைப் பறிகுடுத்திட்டு, அதுகள் விடுற பெருமூச்சு இஞ்சை இருக்கிற பிள்ளை குட்டியளைச் சும்மா விடப்போகுதே? அதுதான் எங்கை பார்த்தாலும் நாசமறுப்பாய்க் கிடக்கும்! இனி நாமளும் பிள்ளை குட்டியளைப் பெத்தனாங்கள். உந்தச் சீலம்பாயளை ஏன் கதைக்க. அப்ப நான் அடுத்த கோல்டிலை இறங்கிறன் தம்பி"

சிறிஸ் என்ன நினைத்தானோ தெரியவில்லை, "அடுத்த கோல்டிலை இறங்கினாலும் உங்களுக்கு உடனே பஸ் கிடைக்காது. ஒன்டரை மணித்தியாலம் குளிரிலை நிக்கவேணும். வீட்டை வந்தியளெண்டால் ஏதும் சூடா குடிச்சிட்டுப் போகலாம்." என்றான். திருவாசகமும் இதற்குத்தானே காத்திருந்தேன் என்று சொல்ல நினைத்ததை நாக்கோடு மடித்துக் கொண்டே அவனோடு இறங்கினார்.

"தம்பிக்கு எத்தினை சகோதரங்கள்?"

"தம்பிமார் ரெண்டு!"

"பொம்பிளைச் சகோதரங்கள் இல்லையேய"

"இருக்கினம்; ரெண்டு அக்காமார், கட்டிக்குடுத்திட்டன்."

சிற்ஸ் உண்மையாகவே பொறுப்புள்ள பெடியனென்று மெச்சினார். "அப்ப இனியென்ன உம்முடைய காரியந்தான். ஏழுவரியமா உழைச்சதெல்லாம் நல்ல காரியத்துக்குத்தான் பயன் பட்டிருக்கு! ம் இஞ்சையும் இருக்குதுகளே குடிச்சு, கும்மாளமடிச்சு..." ஒரு கேன் நிறைய வெறுங்கோப்பியும், பிஸ்கட்டும் கொண்டுவந்து வைத்தான் சிறிஸ். குடித்துக் குடித்துக் கதைக்க வசதியாயிருக்குமென்று நினைத்தார்.

"கோப்பியைக் குடியுங்கோ! நான் குளிச்சிட்டு வாறன்!" அவன் வேலைத்தல உடுப்பைக் கழற்றி விட்டுக் குளிக்கப்போனான். திருவாசகம் பெடியனின் செல்வாக்கைப் பார்க்க நூமை நோட்டம் விட்டார். ஒரு பழைய பிலிப்ஸ் ரீ.வி.டெக் இல்லை. பக்கத்தில் ஒரு சின்னஞ் சிறிய கசற்றேடியோ, அளவான பூச்சாடி, அரை நிர்வாணப் படங்களால் அசிங்கப்படாத சுவர்கள். திருவாசகம் சகல வழிகளிலும் திருப்தியடைந்தார். சிறிஸ் குளித்துவிட்டு வந்து, ஒரு "கப்" பில் தனக்கும் கோப்பியை ஊற்றினான்.

"அம்மா, அப்பா ஊரோடைதானோ?"

"ஓம்! தம்பியவைக்கும் வயது வந்திட்டுது. வீட்டிலை வைச்சிருக்கப் பயமாக்கிடக்கெண்டு எழுதியிருக்கினம்."

"அதெண்டால் மெத்தச் சரிதான்! நேற்றும் களுத்துறைச் சிறையிலை மூன்று பேரைக் கொண்டு போட்டாங்களாம். உள்ளை இருக்கிறவனுக்கே இந்தக் கெதியெண்டால், வெளியிலை திரியிறவன் பாடு சொல்லியே தெரியவேணும்.?"

"அம்மாவும் அதைத்தான் எழுதியிருக்கிறா!"

"பெத்ததுகள் சும்மா இருக்குங்களே? ரெண்டு தம்பிமாரிலை ஒராளை மட்டும் இஞ்சாலை எடுத்து விட்டீரெண்டால் போதும். மற்றத் தம்பியாருன்ரை பொறுப்பை அவனட்டையே குடுத்திடலாம். பிறகு நீர் ஒரு கலியாணத்தையோ காட்சியையோ வைச்சுக் கொள்ளலாம்!" சிறீஸ் எதையோ யோசித்துச்

சுமார் 200 ஆண்டுகளுக்கு முன் ஊ.அ மெஸ்மர் (Mesmer Box) என்ற ஆஸ்திரிய நாட்டு மருத்துவர் கருத்தோற்றத்தை நடைமுறையில் பயன்படுத்தத் தொடங்கினார். கருத்தோற்றம் என்பது பிறர் கருத்தை அப்படியே ஏற்றுக்கொள்ளும் ஒரு மனிதனின் துயர் நிலை ஆகும். இவர் உருவாக்கிய முறைதான் "மெஸ்மரிசம்" என்ற ஹிப்னாடிசம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொண்டிருந்தான். ஒருவேளை திருவாசகத்தின் மகள் நளினியைத்தேடி அவன் எண்ணங்கள் ஓடியிருக் கலாம்.

"என்ன தம்பி கடுமையான யோசனை?"

"இல்லை... தம்பியை எடுக்கிறதெண்டால் நான் என்னம் நாலு வருஷமாவது உழைக்கவேண்டிவரும். அதுக்குப் பிறகு கலியாணத்தைக் கட்டி என்ன பலன் இருக்கப்போகுது..?"

"நீர் சொல்லுறதும் சரிதான். பருவத்தே பயிர் செய்ய வேணும் எண்டு சும்மாவே சொன்னவங் கள். எனக்கும் வேலை வெட்டி கிடையாது என்ரை மூத்தவளுக்கும் தையோட இருவத்திரண்டு வயசு! அவளையும் காலாகாலத்திலை கட்டிக்குடுத்திட ஆசைப்படுறன். நீரும் நமக்கொரு பிள்ளைமாதிரி உம்மடை தம்பிமாரையும் நினைக்க கவலையாத் தான் கிடக்கு...ம்! எல்லாம் பலன்!" அவனையே கூர்ந்து பார்த்தார்.

"பஸ்சுக்கு நேரமாச்செல்லே?"

"அதுக்கென்ன பஸ்சுக்கே பஞ்சம்? அடுத்த பஸ்சிலை போனால் போச்சு!"

"அப்ப நில்லுங்கோ! சாப்பிட்டிட்டுப் போவம்."

"ம...! உம்மைப் போல நல்ல குணமுள்ள பெடியளைத்தானே கடவுளும் சோதிக்கிறார். எனக் குத் தெரிஞ்ச ஏஜென்சிப் பெடியனொருத்தன் பக்கத்து சிற்றியிலைதான் இருக்கிறான். ஒரு கிழமை யிலையும் ஆக்களை எடுத்துக் கொடுக்கக் கூடிய வன். ஆள் வலு விண்ணன். எழுவத்தையாயிரம் குறோணரென்றால் சரி!"

"ஏஜென்ஸி இருந்தென்ன பிரயோசனம் எழு வத்தையாயிரத்துக்கு எங்க போறது?"

"இந்தக் காலத்திலை எழுவத்தையாயிரம் பெரிய காசே? கலியாணம் முடிக்க முந்தி உப்பிடியான சோலியளை வெட்டிப் போடுறதுதான் நின்மதி. என்ரை பெட்டையும் கலியாணம் கட்டினாப்பிறகு கரைச்சல் இருக்கப்படாதெண்டுறவள்! கதை நீண்டு சென்றது. சாப்பிட்டு முடிந்தபோது சிறிஸ் மூத்த தம்பியை விரைவாக வெளிநாடு கூப்பிட்டுவிட்டு, அதே கையோடு தானும் திருமணத்திற்குத் தயாரா கிவிட வேண்டுமென முடிவெடுத்துக் கொண்டான். நளினியின் வயது இருபத்தியிரண்டு என்பது அவ னின் நினைவில் இருந்தது.

"எல்லாம் கேக்க நல்லாயிருக்கு. ஆனால் வட் டியை நினைக்கத்தான்..." என்று மீண்டும் இழுத்தான்.

"நாலு வட்டி ஒரு பெரிய விசயமே? தம்பி வந்தா னெண்டால் ஒரு வரியம் கனக்க கடனை முடிச்சி டலாம். எனக்குத் தெரிஞ்ச ஆளிட்டை கொஞ்சக் காசு கிடக்குது. மனியனுக்கு வட்டி உழைக்க ஆசை. ஆனால் முதலுக்கும் பயம். நான் பொறுப்பு நிண் டால் தரும். வேணுமென்றால் சொல்லும் வாங்கித் தாறன். ஆனால் ஒன்று மனிசன் முதலாந்திகதி வட்டிக்கு நிக்கும் மற்றபடி சோலியில்லை."

சிறிஸ் சம்மதம் தெரிவித்தான். திங்கள் பணத்து

**சுறுசுறுப்புக்குப் பெயர் பெற்ற எறும்புகள் தூங்குவதே இல்லை. பிறந்தது முதல் இறப்புவரை எந்நேரமும் விழித்துக் கொண்டு சுறுசுறுப்புடன் ஓடியாடி உழைக்கின்றன. தவிர ஐம்பது முதல் நூறு நாட்கள் வரை எறும்புகள் ஆகாரம் ஏதும் இல்லாமல் உயிர்வாழக் கூடியன.**

டனும், ஏஜென்சிக்காரனுடனும் வருவதாகக் கூறி னார். அதற்குப் பிறகு கலைவிழாச் சண்டை எப்படி முடிந்திருக்கும் என்பதைப் பற்றிப் பேசிக்கொண்டே விடைபெற்றார். சிறிஸ் பஸ் தரிப்பிடம்வரை கூடவே வந்தான். அந்தச் சிரிப்பில் பொய்யிருக்கவில்லை.

பஸ்சில் ஏறி, ஓரமாக இருந்தபடியே பள்ளி கொள்ளும் பரந்தாமன் போல கண்களை மூடிக் கொண்டார். மகள் நளினியின் காரியம் நல்லபடி நிறைவேறப்போகிறதென மகிழ்ந்தார். அவளுக்குப் பேசி முடித்த மாப்பிள்ளை போனமாதமே கொழும்பு வந்து காத்திருக்கிறான். அவனையும் அடுத்த வாரமே சிங்கப்பூர் புறப்படும்படி தகவல் கொடுக்க வேண்டும்.

ஒரு இலட்சத்தில் சீட்டுத் தொடங்கி, தாச்சித் துண்டும் எடுத்துவிட்டார். அதை மாதாமாதம் கட்டிமுடிக்க சிறிஸ்சையும் பிடித்தாயிற்று. தொடர்ந்து உழைத்து வட்டிகட்ட அவனைப்போல ஒரு நல்ல உழைப்பாளி எங்கே கிடைக்கப் போகிறான். ஏஜென்சியிடம் கிடைக்கும் கொமிசனில் கொழும் பிலிருக்கும் மாப்பிள்ளைக்கும், தனக்கும் விமான ரிக்கற் எடுத்துவிட முடியுமென நம்பினார்.

சிறிஸ்சின் தம்பி பாங்கொக்கிலோ, ரஷ்யாவிலோ தரித்துக் கிடக்கும் அவலமும், அவனை எடுக்க தொடர்ந்தும் பணம் தேவைப்பட இவரிடமே மேலும் கடன்பட்டு, வட்டிக்கும் வட்டியின் வட்டிக்குமாக உழைத்து, சிறிஸ் கிழவனாகப் போகும் காட்சி மனதை உற்சாகப்படுத்தியது. அவரின் விறைத்த காதுகளுக்குள் இரண்டாவது மகளின் கல்யாணத் திற்கு அடிக்கும் கெட்டி மேளமும் தொலைவாகக் கேட்பது போலிருந்தது.

எங்கோ ஒரு கலைவிழா நடக்க, அவரின் இரண்டு மகள் மாரும் கணவன்மாரோடு வந்திருக் கிறார்கள். அவர்களும் புதிதாக வந்திருக்கும் நகைகள், கொண்டைகள், புடவைகள் சகிதமாக அமர்ந் திருக்கிறார்கள். பார்க்கக் கண்கள் பூரிக்கின்றன. திடீரென அவர்களின் வாழ்விற்காக வட்டிகட்டிய சிறிஸ் ஓடிவந்து, ஒரு பியர்ப்போத்தலை நிலத்தில் எறிகிறான். முதுமையடைந்த அவன் அவரை நோக்கி அடிக்க ஓடிவரவே திடுக்கிட்டு விழித்தார். கனவுதான் பஸ் உழுத்தன்போவை நோக்கி ஓடிக் கொண்டிருந்தது.

முற்றும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# லெமூறியாக் கண்டமும் தமிழனும்

— ஜூட் நிமலன்

குமரிக் கண்டம் உலகிலேயே மிகப்பெரிய கண்டமாக இருந்தது. குமரிக் கண்டமானது தெற்கே தென்துருவம் வரையும் தென்கிழக்கே அவுஸ்ரேலியா வரையும் கிழக்கே கிழக்கிந்திய தீவுகளும் மேற்கே ஆபிரிக்கா வரையும் பரவிக் கிடந்தது. இக்கண்டத்தை பல அறிஞர்கள் பெயர் சூட்டியுள்ளனர். "இலெமூறியா"க் கண்டமெனவும் "கொண்வானக்" கண்டமெனவும் அழைப்பர். இந்தக் குமரிக் கண்டத்திலிருந்த பழந்தமிழனை ஆராய்ந்து பார்ப்போம்.

தமிழன் எங்கே பிறந்தான்? தமிழன் உலகின் முதல் இனம். ஆதிக்குடி தமிழன் குமரிக்கண்டத்திலே முதன்முதல் பிறந்தது என்பதில் ஐயமில்லை. நிச்சயமாக உலகிலே முதல் உயிரினம் தோன்றியதும் குமரிக்கண்டத்தில்தான். முதல் பிறந்தவன் தமிழன், அவன் பிறந்த இடம் குமரிக்கண்டம்தான். அவன் பேசிய மொழி எது? தமிழன் பேசிய மொழி தூயதமிழ் மொழிதான். இதில் வரும் கூற்று யாது? "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திலே வாளோடு முன்தோன்றிய மூத்த குடி" என்பது. தமிழ்க்குடி, அவன் பேசிய யாவும் தேன் போன்ற தமிழ்மொழிதான். இந்த மொழியிலிருந்தே பல்வேறுபட்ட மொழிகள் உருவாகின என்பதில் ஐயமில்லை.

தமிழன் இனத்தால் ஒன்றுபட்டவன் என்பது தெரியும். மனிதன் பல இடங்களுக்குச்சென்று வாழ விரும்பினான். அவன் பேசிய மொழி மருவி பல மொழிகள் உருவாகின. தென்னிந்தியாவிலும் தமிழர்கள் தூய தமிழ் மொழியினைப் பேசுகிறார்கள். இந்தக் குமரிக் கண்டத்தில் சகல துறைகளும் நல்ல சிறந்த முறையில் வளர்ச்சியடைந்தன. அவையாவும் குமரிக்கண்டத்தில் ஆரம்பகாலத்திலும் நவீன விஞ்ஞானத்திலும், சிற்பக் கலையிலும், மருத்துவ பொறியியற் துறைகளிலும் கல்வித் துறையிலும் சிறப்போடு விளங்கி வந்தது. இவற்றோடுதான் தமிழ் மொழி உலகின் மூத்த மொழியாக விளங்கி வந்தது. முந்தைத் தமிழர் மூன்று சங்கங்களை உருவாக்கி இருந்தனர். அவை முதற் சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்பனவாகும். ஆனால் இப்போது சங்கங்களுமில்லை குமரிக்கண்டமும் இல்லை. இவை அழிந்து போய்விட்டன. இதற்குக் காரணம் என்ன? கடற்கோள் அழிவால் இந்தக் கண்டம் அழிந்து போனது. இதனால் வடக்கில் இமயமலை தோன்றியது. மகாசமுத்திரம் குமரிக்கண்டத்தில் தேங்கி நின்று இப்போது இந்து சமுத்திரமாக மாறியுள்ளது. இந்தக் கடற் கோள் அழிவினால்தான் இந்து சமுத்திரம் தோன்றியிருக்கவேண்டும் என்பதில் ஐயமில்லை. இந் நிகழ்வு 2–ல் நடைபெற்றது.

*1–ம் கடற்கோள் 10 இலட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்ட கடற்கோள் ஆகும். இதுவே மிகப்பெரிய கடற்கோளாகும். 3–ம் கடற்கோள் 3 இலட்சம் வருடங்களுக்கு முற்பட்டதாகும். 4–ம் கடற்கோள் 80* ஆயிரம் வருடங்களுக்கு முற்பட்டது. இவைகளால் எமது குமரிமகள் சிதைவுற்றுப்போனாள். அத்தோடு இந்த முற்சங்க காலத்தில் புகழ்பெற்றிருந்த நூல்களும் கடற்கோளால் அழிந்து போய்விட்டன. இந்தக் கடற்கோள்களுக்கு தப்பிய நூல் தொல்காப்பியம். இதுதான் முச்சங்கத்திற்கும் தலைவராகவும் இருந்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

■

---

## எறும்புக் கவிஞர்கள்

எறும்புகள்

வரிசையாக ஊர்ந்து சென்றுகொண்டிருந்தன.
அந்த வழியாக ஒரு ஆண் யானையும் பெண் யானையும் வந்தன.
எறும்புகளைப் பார்த்ததும் பெண் யானை நின்றது. ஆண்யானையையும் நிற்கச் சொன்னது.
ஆண் யானை கேட்டது "ஏன் நிற்க வேண்டும்"
பெண் யானை சொன்னது "பாவம் எறும்புகள் அவற்றை மிதித்து விடாதே"
இரண்டு யானைகளும் ஜாக்கிரதையாக எறும்புகளைத் தாண்டிச் சென்றுவிட்டன.
ஊர்ந்து கொண்டிருந்த எறும்புகளில் ஒன்று மற்றொன்றிடம் சொன்னது "பார்த்தாயா, நாம்
கடித்துவிடுவோம் என்று பயந்து அந்த யானைகள் விலகிச் செல்கின்றன."
அந்த எறும்பு சொன்னது "பாவப்பட்ட ஜென்மங்கள்,
பிழைத்துப் போகட்டும்"

கவிஞர் கண்ணதாசன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எழுத்தாளர்களிடம் சில பொறுப்புக்கள்

பாலம் சஞ்சிகையில் பல தரப்பட்ட விடயங்களையும் வெளியிட இருப்பதால் எழுத்தாளர்களிடம் இருந்து ஆக்கங்களை பாலம் சஞ்சிகை எதிர்பார்த்து நிற்கின்றது. கலை, இலக்கியம், விளையாட்டு போன்ற விடயங்களில் ஆர்வம், அனுபவம் உள்ளவர்கள் பாலம் சஞ்சிகையில் பிரசுரிக்கக் கூடியவாறான கட்டுரைகளை எழுதி எமக்கு அனுப்பிவைக்கவும்.

கட்டுரைகள், சிறுகதைகள் கணணியில் எழுதப்பட்டதாயின் 12 Pt-இல் 2,3 பக்கங்கள் [A4] - கையால் எழுதப்பட்டவையாயின் 4, 5 பக்கங்கள் [A4].

சிறிய கட்டுரைகள் ஒரு பக்கத்தில் கணணிப்பதிப்பு அல்லது இரண்டு பக்கங்கள் கையால் எழுதப்பட்டவை. இவை தவிர பாலம் சஞ்சிகையில் பிரசுரிக்கக் கூடியதென நீங்கள் கருதும் விடயங்களையும் எமக்கு அனுப்பி வைக்கவும்.

ஓவியங்கள் வரையக்கூடியவர்களும் எம்முடன் தொடர்பு கொண்டு உங்களது ஆக்கங்களை வெளிக்கொணரவும்.

"கேட்டோம் சொன்னார்கள்" என்னும் பகுதியில் முக்கிய நபர்களை சந்தித்து "பாலம்" வாசகர்களுக்கு அவர்களை அறிமுகப்படுத்தி வருகிறோம். எனவே நீங்களும் கலை, அரசியல், இலக்கிய, விளையாட்டு, வைத்திய, பொறியியல் துறை சார்ந்தவர்களாக இருந்தால் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

PALAM PUBLICATIONS
SONDER PARKEN 10,ST: TV
7430 IKAST
DENMARK

முழுப்பெயர்:-.......................................................................................

முகவரி: -..............................................................................................

..............................................................................................

தொலைபேசி: -.......................................................................................

சார்ந்த துறை:- ......................................................................................

குறிப்பு: -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# ரோஸ் ஏஜென்சி

Somasundaram Ramalingam
Mettlenstrsse 1
4554 Etziken SO
Switzerland.
Tel: 032 614 40 51
Natel: 079 302 56 67
Fax: 032 614 40 64

சுவிசில் விசா B அல்லது C பத்திரமுள்ளவர்கள்
எம்முடன் தொடர்புகொள்ளவும்

| கடன் தொகை | 12 மாதங்கள் | | 18 மாதங்கள் | | 24 மாதங்கள் | | 36 மாதங்கள் | | 48 மாதங்கள் | | 60 மாதங்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வட்டி மாத்திம் 13.9% | கட்டுத் தொகை வட்டியும் முதலும் | வட்டி மாத்திம் 13.9% | கட்டுத் தொகை வட்டியும் முதலும் | வட்டி மாத்திம் 13.9% | கட்டுத் தொகை வட்டியும் முதலும் | வட்டி மாத்திம் 13.9% | கட்டுத் தொகை வட்டியும் முதலும் | வட்டி மாத்திம் 13.9% | கட்டுத் தொகை வட்டியும் முதலும் | வட்டி மாத்திம் 13.9% | கட்டுத் தொகை வட்டியும் முதலும் |
| 10.000 | 726.80 | 893.90 | 1071.80 | 615.10 | 1422.80 | 475.90 | 2148.20 | 337.45 | 2902.40 | 268.80 | 3683.00 | 228.05 |
| 20.000 | 1453.60 | 1787.80 | 2143.60 | 1230.20 | 2846.80 | 951.95 | 4298.20 | 674.95 | 5804.80 | 537.60 | 7366.00 | 456.10 |
| 30.000 | 2180.40 | 2681.70 | 3215.40 | 1845.30 | 4270.80 | 427.95 | 5446.40 | 012.40 | 8707.20 | 806.40 | 1049.00 | 684.15 |
| 40.000 | 2907.20 | 3575.60 | 4287.20 | 2460.40 | 5694.80 | 903.95 | 8596.40 | 349.90 | 1609.60 | 075.20 | 4732.00 | 912.20 |
| 50.000 | 3634.00 | 4469.50 | 6359.00 | 3075.50 | 7118.80 | 399.95 | 8744.60 | 687.35 | 4512.00 | 314.10 | 8415.00 | 1140.25 |

***No.1 for money Super plus Fast Bank credit for Tamils in Switzerland***




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# பெருமைக்குரிய பெண்மணி

## ஆங் சாங் சூ கீ. (Aung san sue Kyi)



இன்று உலகம் பூராகவும் பேசப்படும் பெண்கள் பெயர்களில் முதன்மையானது பர்மிய ஜனநாயகக் கட்சியின் தலைவியான ஆங் சாங் சூ கீ இன் பெயர்தான். தனது முழு வாழ்வையும் ஜனநாயகத்திற்கான போராட்டத்திற்காகவே அர்ப்பணித்திருக்கும் சூ கீ கிட்டத்திட்ட ஆறு வருடங்கள் சிறைவாழ்க்கையை அனுபவித்தவர். பர்மாவின் இராணுவ ஆட்சியில் நிகழும் கொடூரங்களைக் கண்டு மன கொதிப்புக் கொண்டு நாட்டையும் மக்களையும் காப்பாற்ற வேண்டியது தனது வாழ்க்கையின் முக்கிய பணி என்ற உணர்வுடன் 1988 செப்டம்பர் 24ம் திகதியன்று இவரும் தின் ஊ, ஆங் கீ என்ற இருவருடன் இணைந்து தோற்றுவித்த அமைப்புத்தான் ஜனநாயகத்திற்கான கழகம் (League for Democracy). 1988—ல் நிகழ்ந்த மாணவர் ஆர்ப்பாட்டங்களில் பெருந்தொகையினர் கொல்லப்பட்டமை, பலர் சிறை சென்றமை, நாட்டை விட்டு வெளியேறியமை, இராணுவத்தின் கொலை வெறிப் போக்கு; அட்டூழியம் எல்லாம் சேர்ந்துதான் ஜனநாயக அமைப்பு உரு ஒன்றின் உருவாக்கத்திற்கு சூ கீஐ உந்தியது. பர்மா முழுவதும் சென்று இராணுவ எதிர்ப்புப் பிரச்சாரம் செய்த சூ கீ 1989 ஜூலை 19 ம் திகதியை தமது தந்தையின் நினைவாக "தியாகிகள் நாளாக ஊர்வலம் நடத்திக் கொண்டாடுவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டபோது இராணுவத்தினரால் கைதாகி வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

1945— ம் ஆண்டு ஜூன் 19 திகதி பிறந்த சூ கீ இன் தந்தையான ஆங்சாங் இராணுவத்தின் உயர் பதவியில் இருந்தவர் தாய் தாதின் கீ ஒரு மருத்துவ தாதி. இருவரதும் காதல் திருமண மூலம், கிடைத்தவர் தான் சூ கீ. இவரது தந்தை 1930—களில் ஆங்கிலேயருக்கு எதிரான எதிர்ப்பு இயக்கங்களை ஒழுங்குபடுத்துவதில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். விடுதலை அமைப்பு என்ற அணியின் பொதுச் செயலாளர், பர்மிய சுதந்திர இராணுவம் என்ற அமைப்பின் முன்னோடிக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ளில் ஒருவர். 1947 ஜூலையில் நிர்வாக மன்றக் கூட்டம் ஒன்றில் இனந் தெரியாத நபர் ஒருவரால் சுட்டுக் கொலைசெய்யப்பட்டவர். 1948 ஜனவரி 4—ம் திகதி சுதந்திரமடைந்த பர்மாவின் முதற் பிரதமரான ஊநூவின் ஆதரவில் சூ கீ இன் தாய் சமூக நலத்திட்ட இயக்குனராக நியமிக்கப்பட்டு பின் 1961— இல் இந்தியாவிற்கான பர்மிய தூதுவராக நியமிக்கப்பட சூ கீயும் இந்தியாவில் தனது படிப்பை தொடர வேண்டி ஏற்பட்டது, நியூடெல்கியிலுள்ள லேடி ஸ்ரீராம் கல்லூரியில் கல்லூரிப் படிப்பை முடித்த சூ கீ இங்கிலாந்தின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் மேற்படிப்பை முடித்தார். சிறிதுகாலம் ஆசிரியராகப் பணியாற்றிய இவர் நியூயோர்க்கில் உள்ள ஐ.நா தலைமையகத்தில் மூன்றாண்டுகள் கடமையாற்றினார். பூட்டான் நாட்டிற்கு ஐ.நா அங்கத்துவம் கிடைத்த காலத்தில் பூட்டான் வெளியுறவுத் துறைக்கு ஐ.நா சம்பந்தப்பட்ட ஆலோசகராகவும் சூ கீ நியமனம் பெற்றார். 1972 ஜனவரி 1–ம் திகதி



**—முழுமையான வாழ்க்கை ஒன்றை மேற்கொள்ள விரும்பும் ஒருவர் அடுத்தவர்களின் தேவைகளை கண்டுணர்ந்து அதற்குரிய பொறுப்பையும் தாங்கிக்கொள்வதற்கான மனோதிடத்தையும் அதற்குரிய விருப்பத்தையும் கொண்டிருத்தல் அவசியம்.**

இக் குழுவில் அங்கம் வகித்த மைக்கேல் ஏரி, என்ற ஆங்கிலேயரை மணம் முடித்த சூ கீக்கு இரு மகன்கள் இருக்கின்றனர்.

1991—ம் ஆண்டுக்கான நோபல் சமாதானப் பரிசைப் பெற்ற சூ கீ 1990—லும் மனித உரிமைகளுக்கான (Thorolf Rafto) பரிசைப் பெற்றார். இரு பரிசுகளும் இவரது சிறை வாழ்க்கைக் காலத்திலேயே கிடைத்தது. 1991 டிசம்பர் 10–ம் திகதி





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இவருக்கு நோபல் விருது வழங்கும் வைபவத்தில் இவர் சார்பாக கலந்து கொண்ட இவரது மகன் அலெக்ஸாண்டர் ஏரிஸ் பின் வருமாறு குறிப்பிடுகிறார்.

"விருதுகளுக்கெல்லாம் மேலான இந்த நோபல் விருதை எனது பெயரில் அன்றி பர்மா நாட்டின் அனைத்து மக்களினது பெயரால் ஏற்றுக்கொள்கிறேன். இவ்விருதுக்கு நான் மட்டுமன்றி ஜனநாயக பர்மாவிற்கான முயற்சியில் தமது வாழ்க்கையை தமது சுதந்திரத்தை, தமது நன்னிலையை தியாகஞ் செய்த செய்து கொண்டிருக்கின்ற அனைத்து ஆண்கள் பெண்கள், சிறுவர்கள், அனைவருமே உரித்துடையவர்கள். இவ்விருது அவர்களுடையது. பர்மாவின் சமாதானம், சுதந்திரம், ஜனநாயகம் என்பவற்றுக்கான நீண்ட கால போராட்டத்தில் ஏற்பட்ட வெற்றி தான் இது" என்றுதான் எனது தாய் கூறுவார் என்று தெரிவிக்கிறார்.

பர்மிய மக்கள் அனைவரினதும் மன உறுதிப்பாட்டின் ஒரு பெறுமதிமிக்க குறியீடாக சூ கீ ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றார். இந்த மன உறுதிப்பாடு பர்மிய நகர்ப் புறங்களில் வாழ்பவர்கள், சிறையில் வாடுபவர்கள் பர்மாவின் அடி உதைபட்டவர்கள், சித்திரவதைக்குட்பட்டவர்கள், இளந்தலைமுறையினர், பர்மாவின் நம்பிக்கையூற்றுக்களான காடுகளுக்கு தப்பி ஓடி மலேரியா நோய்களினால் இறந்து கொண்டிருக்கின்ற பர்மாவின் இளந்தலைமுறையினர், இராணுவத்தினரால் அடித்து தைக்கப்பட்டு அவமரியாதை செய்யப்படுகின்ற புத்த குருமார், சூ கீ போன்று துன்பப்படும் மூத்த அனுபவம் வாய்ந்த, உயர் மரியாதைக்குரிய தலைவர்கள் அனைவரினதும் மன உறுதிப்பாட்டின் ஒரே வெளிப்பாடாகவே சூ கீ கருதப்படுகின்றார்.

பர்மிய மக்களால் மட்டுமன்றி உலகின் மனச்சாட்சியாக இன்று அனைவராலும் அழைக்கப்படும் சூ கீ மானுடம் போற்றும் உத்தமர்களின் வரிசையில் தனக்கென ஓர் இடம்பிடித்து மனித வரலாற்று பதிவேடுகளில் நிரந்தரமாக வாழப்போகும் ஓர் உன்னத பெண்மணி தான். **



**"தனது சொந்த அர்ப்பணிப்பின் மூலமும், தனிப்பட்ட தியாகத்தின் மூலமும் முழு நிறைவு என்ற எண்ணக்கரு, அதை அடைவதற்கான தூண்டுதல். அதை நோக்கிய பாதை என்ற ஒன்றை கண்டு பிடிப்பதற்கான அறிவு, அந்தப் பாதையில் தொடர்ந்து செல்வதற்கான மனோதிடம், விருப்பு தனிப்பட்ட ஒரு மனிதன் கொண்டிருக்கும் வரையறைக்கு மேலே உயர்ந்து செல்வதற்கு அவசியமான துரம் அனைத்துமே போராட்டத்திற்கு அவசியமான ஆன்மீக இலக்குகள் ஆகும். இதை உணர்ந்து கொள்ளலானது மானுட பொறுப்பிலேயே முற்றுமுழுதாக தங்கியிருக்கின்றது.**

## நிரம்

வேகமாக ஓடும்போது மூச்சிரைக்க காரணம் என்னவென்றால்

வேகமாக ஓடும்போது உடல் தசைகள் குறிப்பாக கைகால்கள் வழக்கத்தைவிட அதிகமாக இயங்குகின்றன. அந்த அதிக இயக்கத்திற்குஸ சாதாரணமாகத் தேவைப்படும் அளவை விட மிக அதிகளவில் ஒட்சிசன் தேவைப்படுகிறது. நாம் அதைப் பெறுவதற்கு வேகமாக மூச்சு விடுகிறோம். இதனால் உள் மூச்சின் அளவு (Inspiration) அதிகமாகிறது. என்றாலும் நுரையீரலில் குறிப்பிட்ட அளவுக்கு மேல் காற்று தங்கமுடிவதில்லை. இதனால் அளவுமீறிய உள் மூச்சை வெளியேற்ற வெளிமூச்சின் அளவு (Expiration) அதிகரிக்கிறது. ஆக, நாம் ஓடும் போது, இந்த உள் மூச்சும், வெளி மூச்சும் மிகவேகமாக நடப்பதால் நமக்கு மூச்சிரைக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# திருமண உறவுகள் சட்டங்களால் வழிப்படுத்தப்படுகின்றன

திருமண பந்தங்கள் மனித வாழ்வியக்கத்தின் பிரதான பாத்திரமாக மனிதரிடையே நிலவி வருகின்றன. திருமணங்கள் தொடர்பில் பல நாடுகளும் பல்வேறுபட்ட நடைமுறைகளை அவரவரது மத, பண்பாட்டு பின்னணிகளைத் தழுவி விதிமுறைகளுக்கு ஒத்திசைவானதும், முரண்பாடானதுமான முறையில் உருவாக்கி நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அதற்கமைய எமது பிரதேசத்திலும் காணப்படுகின்ற கலாச்சார மற்றும் சமூக, மத ஏற்பாடுகளுக்கு இசைவான முறையில் திருமணங்கள் தொடர்பான சட்டங்கள் செயலுறுத்தப்படுகின்றன. இவ்வேறுபாடு பல காலமாக ஏற்கனவே இங்கு நடைமுறையில் இருந்த சட்ட ஏற்பாடுகளால் காலந்தோறும் பேணப்பட்டு வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

தற்போது தமிழீழப் பகுதியில் நடைமுறையிலுள்ள தமிழீழ சட்டங்களின் ஏற்பாடுகளுக்கு அமைவாகவே இத்திருமணங்கள் இடம்பெறுகின்றன. அதன் பிரகாரம் ஒரு திருமணம் மூன்று வழிகளில் உருவாக முடியும். இவற்றில் முதன்மையானது பதிவால் ஏற்படும் திருமணங்கள் ஆகும். இவை வலிதானவையும் சான்றுகளுடன் கூடியதுமானதாகும். இன்றைய உலகின் தேவைகளை ஈடு செய்வதற்கும் பதிவிலான திருமணங்கள் பெரிதும் பயனுடையவை. எனவே திருமணங்கள் எவையும் பதிவுக்கு உட்படுத்தப்படுவது சிறப்பானதாய் அமையும். பதிவுகளைச் செய்கின்ற போது அதற்கான சட்டத் தகுதிகளில் பிரதானமானது திருமணம் செய்பவருடைய வயது ஆகும். இதில் ஆண் *21* வயதையும் பெண் *18* வயதையும் அடைந்திருப்பின் அவர்கள் தமது சொந்த விருப்பின் அடிப்படையில் இத்திருமணத்தை மேற்கொள்ள முடியும். ஆனால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆண் 18 வயதிற்கும் 21 வயதிற்கும் இடைப்பட்டவராயும் பெண் 16 வயதிற்கும் 18 வயதிற்கும் இடைப்பட்டவராயும் இருப்பின் அத்தகையோர் தமது பெற்றோர் அல்லது பாதுகாவலர் அல்லது சட்டப்படி உரிய நீதிமன்ற ஒப்புதல் இல்லாது இவ்வாறு பதிவு செய்யப்படும் போது பெற்றோர் பாதுகாவலரின் மறுப்புக்கள் நியாயமானவையாயின் அவை ஏற்கப்படுகின்றன. ஆயினும் சிக்கல்கள் ஏற்படும்போது இவை தொடர்பான அதி உயர் முடிவினை உரிய மாவட்ட நீதிமன்றுகளே எடுக்கும் தகுதியுடையன. ஆனால் 18 வயதிற்கு கீழ்ப்பட்ட ஆணும் 16 வயதிற்குக் கீழ்ப்பட்ட பெண்ணும் தம்மிடையே எவ்வகையிலும் ஒரு பதிவுத் திருமணத்தினைச் செய்து கொள்ள முடியாது. இதனைத் திருமணப் பதிவாளர்கள் கவனத்தில் கொண்டு செயற்படுத்துவதால் இந்நிலையில் அதிகம் தவறுகள் இடம்பெற வாய்ப்புகள் இருப்பது இல்லை.

அடுத்து இரண்டாவதாகக் காணப்படும் சட்டப்படியான திருமண உறவுகளில் சடங்காசாரத் திருமணங்கள் முக்கிய இடம் வகிக்கின்றன. இவை வழக்காற்றுத் திருமணம் எனவும் சமயாசாரத் திருமணம் எனவும் வழங்கப்படுகின்றன. இவ்வகைத் திருமணங்கள் தாலி கட்டி, மாலை மாற்றி அல்லது கைப்பிடித்து செய்கின்றவையாக இருக்கின்றன. தவறான, சட்டமுரணான வயதுக்காரர் இடையே ஏற்படும் திருமண உறவுகள் இவ்வகைத் திருமணங்களில் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. இவை மக்களின் பழக்கவழக்கங்களுடன் தொடர்புடையதாதலால் சிறு வயதினரும் இவ்வகைத் திருமணங்களின்பால் உள்வாங்கப்படுகின்றனர். இத்தகைய திருமணம் முடிக்கப் போகும் ஆண் 21 வயதையும் பெண் 18 வயதையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும். 16 வயதிற்கும் 18 வயதிற்கும் இடைப்பட்ட பெண்ணும் 18 வயதிற்கும் 21 வயதிற்கும் இடைப்பட்ட ஆணும் தொடர்புறும் இத்தகைய திருமணங்கள் ஆயின் அவரவரது பெற்றோரின் ஒப்புகை தேவைப்படுகின்றது. இவ்விரு வயது நிலைகளின் கீழ்ப்படுவோர் செய்து கொள்ளும் திருமணங்கள் சட்டவலுவுடையன வல்ல. ஆனாலும் எமது சமூகத்தில் இவை பற்றிய போதிய அறிவின்மையால் இத்தகைய திருமணங்கள் ஏற்படுகின்றன.

மூன்றாவது நிலைத் திருமணங்கள் மதிப்பு நடப்புத் திருமணங்கள் எனும் வகையில் அடங்குகின்றன. இவ்வகைத் திருமணங்களில் ஆண் பெண் இருவரும் கணவன் மனைவி போல் வாழ்கிறார்கள் என ஊரவர் நம்பும் அளவிற்கு வாழ்ந்தார்களானால் போதுமானது. இதில் ஊரவர்கள் எனக் குறிப்பிடுவது அவ்வச்சமூக சூழ்நிலைகள் மக்கள் அடர்த்தி என்பவற்றால் மாறுபட்டு அமையும்.

இவ்வகையான நடப்பு மதிப்பு திருமணங்களினால் அதிகமான தவறான திருமணங்கள் இடம்பெற வாய்ப்புகள் காணப்படுகின்றன. இத்தகைய திருமணங்களில் பெரியோரின்



அல்லது சட்டத்தின் வழிநடத்தல் நேரடியாக இல்லாமையினால் இங்கே தவறுகள் இடம்பெற வாய்ப்புகள் அதிகமாயுள்ளன. உணர்வு மேலீட்டின் உள்ளே இவ்வகைத் திருமணத்தின் பகுதியினர் உட்படுவதால் இங்கே ஏற்படும் தவறுகளும் மிகையானவையாகக் காணப்படுகின்றன. எமது சமுதாயத்திலிருந்து இவ்வகைத் திருமண உறவுகள் குறைந்து அருகிச் செல்லுமாயின் இந்நிலை சமூக வாழ்வின் பெரும் அனுகூலமான நிலையினைத் தோற்றுவிக்கும்.

சாதாரணமாக சட்டப்படியான ஏற்புடையனவான திருமணங்கள் இம் மூன்று நிலையிலும் ஏற்படுகின்றன. ஆனாலும் சட்டமுரணான திருமணங்களும் அவைகள் ஏற்படுத்தும் குற்ற நிலைகளும் தண்டனைகளும் பற்றிய சட்டங்களும் எமது பகுதியில் காணப்படுகின்றன. இச் சட்டங்கள் கூறும் நெறி முறைகள் மக்களை வழிப்படுத்த உதவுகின்றன.

– கலைஞன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அறிவுதான் சக்தி

இன்டெலிஜன்ஸ்— புத்தி — அறிவு என்பதை அலசிப் பார்க்கலாம். இன்டெலிஜன்ஸ் என்கிறவார்த்தை லெகர் என்கிற லத்தீன் வார்த்தையிலிருந்து மருவியது. அந்த வார்த்தைக்கு அர்த்தம் — சேகரிப்பது. சேகரிப்பது , சேர்த்து வைப்பது. அதிலிருந்து ஒரு முடிவுக்கு வருவது இதுதான் அறிவு என்றால் கணணிக்கு அறிவு புகட்டமுடியும். சதுரங்கம் விளையாட்டையே எடுத்துக் கொள்ளுங்கள். ஆரம்பகாலத்தில் சதுரங்கம், சர்க்கஸ் போன்ற விளையாட்டுக்களின் ரகசியத்தை கணணிக்கு சொல்லிக் கொடுப்பது தான் அறிவு என்று ஆராய்ச்சியாளர்கள் எண்ணினர். அப்படி இல்லை. மிக அருமையாக சதுரங்கம் ஆடக்கூடியவர்களுக்கு வீட்டில் ஒரு பியூஸ் போனால் போடத் தெரியாது. ரொம்ப சாதாரணமாக சதுரங்கம் ஆடுபவர்கள் அருமையாகச் சமைக்கலாம். அல்லது மிக அழகாகச் சித்திரம் வரையலாம்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதனால் ஒரு துறையில் தேர்ந்திருந்தால் மட்டும் அது புத்திசாலித்தனம் ஆகாது.

பொதுப்படையான அறிவுபூர்வமான காரியங்கள் என்பவை எவை? அவற்றுக்கு ஏற்ற தகுதிகள் என்ன? என்பதை ஆராய்ந்தார்கள். அவை என்ன என்று பார்க்கலாம்.

அறிவு என்பது பல சாத்தியக் கூறுகளில் ஒன்றைத் தேர்ந்தெடுப்பது. யூகம் – இப்படிச்செய்தால் நல்லது என்று தீர்மானிப்பது. அறிவு என்பது இப்படிச் செய்தால் என்ன என்று பார்ப்பது. சரியாக வரவில்லையா, இப்படிச் செய்து பார்ப்போமே என்று மற்றொன்றை முயன்று பார்ப்பது. அறிவு என்பது ஒரு விரும்பிய குறிக்கோளிலிருந்து பின்னோக்கிச் சிந்திப்பது. குறிக்கோள் என்பது கல்யாணமாக இருக்கலாம் அல்லது தபால் அலுவலகத்தை அடைவதாக இருக்கலாம். குறிக்கோளிலிருந்து எவ்வளவு தூரம் விலகி இருக்கிறோம் என்று அறிந்து அந்த விலகலின் அளவைக் குறைப்பது. இம்மாதிரி அறிவின் அம்சங்களை அலசிப் பார்த்தால் தான் கணணிக்கு அறிவு புகட்ட முடியும். கடந்த 45 ஆண்டுகளில் கணணிகள் தொழில் நுட்ப ரீதியில் பல மாற்றங்களை அடைந்துள்ளது. முதல் தலைமுறைக்காலம் 1945 இல் இருந்து 1960 வரை கணணிகள் பெரிய வால்வுகளால் இயங்கின. அளவில் மிகப் பெரியது. குளிர்சாதன வசதி அவசியம் தேவை. 1960—இல் இருந்து 1964 வரை 2–ம் தலைமுறைக்காலம். அப்போது கணணிகளில் டிரான்சிஸ்டர்களும் டயோடுகளும் பயன்படுத்தப்பட்டன. விலையில் குறைவும் அளவில் குறைவும் இதன் சிறப்பம்சங்களாகும். 1964 —இல் இருந்து 1970—வரை மூன்றாம் தலைமுறை. இதில் ஒருங்கிணைப்புச் சுற்றுக்கள் என்பவைபயன்படுத்தப்பட்டதால் கணணிகள் வேகமாகச் செயற்படத் தொடங்கின. 1970— இல் இருந்து 1985 வரை 4—ம் தலைமுறை இதில் பெருமளவில் ஒருங்கிணைந்த சுற்றுக்ள் பயன்படுத்தப்பட்டன. தற்போது வழக்கத்திலுள்ளவை நான்காம் தலைமுறையைச் சேர்ந்த கணணிகளே.

நுண்ணறிவுத் திறன் கொண்ட 5–ம் தலைமுறைக் கணணிகள் தற்போது தயாராகிக்



கொண்டிருக்கின்றன. இந்தக் கணணிகள் சித்தாந்தத்தில் இக்காலத்துக் கணணிகளில் இருந்து முற்றிலும் வேறுபட்டவை. அடுத்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்த செயற்கை அறிவு கணணிகளால் மனித சமுதாயத்தில் ஒரு புரட்சிகரமான மாறுதல் வரப்போகிறது. இன்றைய மிக அதிவேக சுப்பர் கணணிகளைப் போல பன்மடங்கு இவை வேகமாக இயங்கப் போகின்றன. இந்த வகைக் கணணிகளுடன் நாம் தினசரி பேசிக் கொள்ளும் சாதாரண மொழிகளில் பேசமுடியும்.



இவற்றிற்கும் படம் காட்டி புரிய வைக்க முடியும். கீபோர்ட் மூலமாக அல்லது கையெழுத்து மூலமாக இவற்றிற்கு ஆணைகள் பிறப்பிக்க முடியும் இந்த 5–ம் தலைமுறைக் கணணிகளை பயன்படுத்த கணணிமொழி தேவையில்லை. அதற்கான சிறந்த பயிற்சி எதுவும் தேவையிருக்காது. சமுதாயத்தின் அத்தனை தளங்களுக்கும் இந்தக் கணணிகள் பயன்படப் போகின்றன. பயன்படுத்துவோருக்கு சிறப்பாக ஏதும் ஞானம் தேவையிருக்காது. பயன்படுத்துபவரை கேள்வி கேட்டு அபிப்பிராயம் கேட்டு அந்த விடைகளிலிருந்து அவர் தேவையைப் புரிந்து கொள்ளக்கூடிய சக்தி அந்தக் கணணிகளுக்கு இருக்கும். இவை அதிக விலை இருக்காது. அதனால் பரவலாகப் பயன்படுத்தப்படும். அலுவலகங்களில், தொழிற்சாலைகளில், சாப்பாட்டு விடுதிகளில், கடைகளில், வயல்களில், ஏன் மீன் பிடிப்பில் எல்லாத் துறைகளிலும் பயன்படும். குறிப்பாக இல்லங்களில்.

ஜப்பான் நிகழ்காலச் சாதனைகளில் ஓர் எல்லையை அடைந்துவிட்டது. அவர்கள் விற்கும் எல்லாப் பொருள்களுமே ஒரு வியாபார எல்லைக்கு வந்துவிட்டன. இனிமேல் மூன்று மாதத்திற்கு ஒரு முறை கார் மாற்றினால்தான் கார் வியாபாரம் பெருகும். இந்த திகட்டல் அளவுக்கு வந்துவிட்டதால் எதிர்காலத்தில் ஜப்பான் பொருட்களைவிட அறிவை, அறிவு சாதனங்களை விற்பதில் கவனம் செலுத்தப் போகிறது.

"அறிவே சக்தி" இந்த வார்த்தைகளை முதலில் சொன்னவர் கி.மு. 4—ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஸன்ட்ஸூ என்கிற சீன அறிவாளி. மாட்ஸே துங், ஜப்பானியப் பேரரசு,அமெரிக்க இராணுவம் எல்லோரும் ஸன்ட்ஸூவின் பொன்மொழிகளை மனனம் செய்தார்கள். இந்தக் கணணி இயலில் இந்தப் பொன் மொழிக்கு வேறு ஓர் அர்த்தம் கிடைத்திருக்கிறது.

"அறிவுதான் சக்தி. இந்தச் சக்தியால் ஓர் அரசனோ ஒரு நல்ல தலைவனோ அபாயமின்றித் தாக்கமுடியும். இரத்தம் சிந்தாமல் வெல்லமுடியும். மற்றவர்களை மிஞ்ச முடியும்" என்றார் ஸன்ட்ஸூ. ஜப்பானியர்கள் இப்போது அதைத் தான் செய்து கொண்டிருக்கிறார்கள்.

நன்றி.

றெம்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நாடும் மக்களும்



# மலேசியா

மலேசியா மலைகள் நிறைந்த பசுமையான இடம். மழையைத் தரக்கூடிய அடர்த்தியான பெருமரங்களைக் கொண்டதுடன், பெரிய அளவில் றப்பர் மரங்களும், எண்ணையைத் தரக்கூடிய பாம் மரங்களும் உள்ளன.

அதிகமான மலாய் மக்கள் வயற்கிராமங்களிலேயே வாழ்கின்றனர். சீனர்கள் (35 வீதம்) நகர்ப்புறங்களில் வாழ்கின்றனர். மலேசியா ஒரு இஸ்லாமிய நாடாக இருக்கின்ற போதிலும் ஏனைய மதங்களும் அங்கே வழிபாட்டில் உள்ளன.

கி.மு.2000ம் ஆண்டளவில் சீனாவில் இருந்து மலாயர்கள் மலேசியாவிற்குள் வந்ததாக இன்றைய மலாயர்களின் மூதாதையர்கள் கூறுகின்றனர். இவர்களுள்






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பரப்பளவு – 329,580 ச.கிமீ
சனத்தொகை – 19,239,000
தலைநகரம் – கோலாலம்பூர்
அரசமொழி –
பகாஸா மலேசியா
பிரதான மதங்கள் –
இஸ்லாம், பௌத்தம்
நாணயம் – மலேசியன்
டொலர் [ ரிங்கிற் ]
பிரதான ஏற்றுமதிகள் –
றப்பர், பாம் எண்ணெய், பெற்றோலியம், மரம், தகரம், இலத்திரனியல் பொருட்கள்







பெரும்பான்மையானோர் மீன் பிடித் தொழிலை அல்லது கடற் கொள்ளைகளை மேற்கொண்டு வந்தனர்.

பிரிட்டிஷார் 1800—இல் முற்று கையிட முன்னர் அரபுக்களும், போத்துக்கீசரும், ஒல்லாந்தரும் இக்கடற்பிரதேசங்களை ஆக்கிரமித்திருந்தனர். 2—ம் உலகயுத்தத்தின் போது ஜப்பானியர்கள் மலேசியாவை ஆக்கிரமித்திருந்த போது, கம்யூனிஸ்ட் கெரில்லாக்கள் பிரிட்டிஷாருக்கு எதிராக பயங்கரவாத பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

1957—இல் மலேசியா சுதந்திரம் அடைந்தது. மலேசியா ஜனநாயக முறையிலான அரசமைப்பைக் கொண்டுள்ளது.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிகரட்டினால் உடலினுள் 46 நஞ்சுப் பொருட்கள் செல்கின்றன

சிகரட் பிடிக்கும் ஒருவர் வாயில் வைத்து புகை இழுக்காமல்,அதனை வாயில் வைத்திருக்கும் போது அதன் முனையில் இருந்து சுமார் 600 பாகை சென்ரிகிரேட் வெப்பம் வெளியேறுகிறது. ஆனால் சிகரட்டை வாயில் வைத்து புகையை உள்ளிழுக்கும் போது வெப்பநிலை 900 பாகை சென்ரிகிரேட் ஆகும். இவ்வேளை சாராதரணமாக கொதிநீரினை வெப்பநிலை சுமார் 100 பாகை சென்ரிகிரேட் என்பது நோக்கப்பட வேண்டும். அதன் 9 மடங்கு அதிகமான வெப்பம் நாம் சிகரட்டை வாயில் வைத்து புகைக்கும்போது உருவாகிறது.

இவற்றுடன் சிகரட் புகையினை உள்ளே இழுத்து மீண்டும் வெளியே விடும்போது 600 கோடி சிறு துகள்கள் வெளியே செல்கின்றன. இச் சிறுதுகள்கள் என்பது நமது உடலில் உள்ள அட்கலங்களால் உறிஞ்சக்கூடியனவாகும். இதன் அளவு 0.1 முதல் 0.6 மைக்ரோஸ் என்றும் விஞ்ஞானிகள் கணிப்பிட்டுள்ளார்கள்.



மேலும் சிகரட்டினைப் புகைக்கும் போது காபனோர் ஒட்சைட்டு, காபனீர் ஒட்சைட்டு, தார், நிக்கொட்டின், பொன்சோபைறின், அமோனியா, நைற்றோஸ் அமோனியா, பைபிடின், டென்ரின் காபனீர் ஒட்சைட்டு, நைதரசன் ஒட்சைட்டு என்பவற்றுடன் மொத்தம் 46 வகையான நச்சுப் பொருட்கள் உடம்பினுள் செல்கின்றன என்றும் விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

உங்களிற்கு வேண்டிய அனைத்து மளிகைப் பொருட்களையும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

மக்கள் கடை

குறைந்த விலை சிறந்த தரம்

அனைத்து உள்ளங்களின் நன்மதிப்பைப் பெற்ற மக்கள் கடை
அது உங்களின் கடை

59,Rue Louis Blanc; 75010 Paris Tel: 01 42 05 99 02



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# Woodlands Restaurant

## வூட்லண்ட்ஸ் உணவகம்

நீங்கள் விரும்பும்படி சுத்தமான முறையிலும், தரமானதாகவும் தயாரிக்கப்பட்ட உணவு வகைகளை உடனுக்குடன் சுவைத்து மகிழ்ந்திட நாடவேண்டிய இடம் வூட்லண்ட்ஸ் உணவகம்.

வெளிநாடுகளிலிருந்து பாரிஸ் வரும் மக்களே ஒருமுறை வூட்லண்ட்ஸ் உணவகத்திற்கு வருகை தந்து எமது உணவு வகைகளை சுவைத்துப் பாருங்கள்.

எமது உணவகம் 100 இருக்கை வசதி கொண்ட நவீன முறையில் அமைக்கப்பட்டது.

வாடிக்கையாளர் நலன் கருதி மதிய உணவுக்கு ஒரு மாதத்திற்கு 500 பிராங்குகள் மட்டுமே.

207,Rue Fg. St. Denis. 75010 Paris.
**Tel: 01 40 37 08 20 Fax: 01 40 37 28 20**

www.tamilarangam.net


# பாரிஸில்

உங்களுக்குத் தேவையான புதிய பழைய பாடல்கள், திரைப்படங்கள் கொம்பக் டிஸ்குகளில் (CD) பெற்றுக்கொள்ளவும் மற்றும் பழைய புதிய திரைப்படங்கள், திரைப்படப்பாடல்கள் ஆகியவற்றை வீடியோ கசற்றுக்களில் பெற்றுக் கொள்ளவும் நீங்கள் பாரிஸ் லாச்சப்பலில் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

LUNE

# LUNE

*INTERNATIONAL*

**5 Rue Perdonnet, 75010 Paris. Mº: La Chapelle**
**Tel: 01 42 09 21 43**


Visit our web : www.thamizham.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்